உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 22 ஞாயிற்றுக்கிழமை (06-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:42

# நேரடிப் பேச்சுக்கு முன்பதாக பாலசிங்கம் வன்னி செல்வார்!



## தலைவர் பிரபாகரனுடன் நேரில் கலந்தாலோசனை நடத்துவதற்கு

லண்டன்,ஜனவரி6

**தற்போது லண்டனில் தங்கியிருக்கும் புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் இடையே நேரடிப் பேச்சு நடப்பதற்கு முன்னர் வன்னிக்குச் சென்று திரும்புவார்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேச்சுக் குறித்து நேரடியாகக் கலந்தாலோசனை நடத்தவே அவர் அங்கு செல்லவிருக்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

அரசு - புலிகள் உத்தேசப் பேச்சுக்களின்போது பின்பற்றவேண்டிய நடைமுறைப் போக்குகள் குறித்து தலைவர் பிரபாகரனுடன் நேரில் கலந்தாலோசனை நடத்துவது அவசியம் என்று ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருதுவதாகத் தெரிகின்றது.

பேச்சின்போது எடுக்கவேண்டிய நிலைப்பாடு குறித்து தொலைத்தொடர்புக் கருவிகள் மூலம் கலந்தாலோசனை நடத்தி முடிக்க முடியாது என்றும் -

இருவரும் மிக விரிவாக - மிகத் தெளிவாக - சில விடயங்களை ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டியிருப்பதால் அன்ரன் பாலசிங்கம் வன்னி திரும்பவேண்டிய அவசியம் உள்ளது என்றும் -

இலங்கை அரசுத் தரப்புக்கு உணர்த்தப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

பேச்சுக்காலத்தில் அன்ரன் பால

(11ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டமைப்பின் கூட்டம் நாளை!

கொழும்பு,ஜன.6

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் கட்சிகள் தனித்துப் போட்டியிடுவதா அல்லது கூட்டமைப்பில் இணைந்து போட்டி

(12ஆம் பக்கம் பார்க்க)



### அமைச்சரின் இறுதிக்கிரியைகள்

கொழும்பு,ஜன.6

ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவரும், அமைச்சருமான காமினி அத்துக்கோறளையின் இறுதிக்கிரியைகள் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கொட்டும் மழைக்கும் மத்தியில் இரத்தினபுரியில் நடைபெற்றன. (உ-6)

## நோர்வேக்குழு வியாழன் கொழும்புக்கு!

கொழும்பு,ஜன.6

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் நேரடிப் பேச்சுக்கு கொண்டுவர ஏற்பாட்டாளர் பணியில் ஈடுபட்டுள்ள நோர்வேக் குழு கடந்த வெள்ளியன்று புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசிய பின்னர் -

எதிர்வரும் வியாழக்கிழமை 10ஆம் திகதி கொழும்புக்கு வருகின்றது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிஸன், வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், வெளிவிவகார அமைச்சின் அதிகாரி செல்வி கேர்ஸ்டி றொம்ஸ்டால் ஆகியோரைக் கொண்ட நோர்வேக் குழுவே வியாழனன்று கொழும்பு வருகின்றது.

லண்டனில் புலிகளின் பிரதிநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் தாங்கள் நடத்திய பேச்சுக்களின் தொடர் நட

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி வீதியில் கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பமாம்!

### அமைச்சர் ஜயலத் கூறுகின்றார்

கொழும்பு,ஜன.6

வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தரைப்பாதையைத் திறக்க முன்னோடியாக கண்டி வீதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

கண்டிவீதியில் படையினர் வசமுள்ள பகுதிகளில் படையினரும்-

விடுதலைப் புலிகள் வசமுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகளும்-

கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை தற்சமயம் மேற்கொண்டுள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## அமைதி முயற்சிகளுக்குத் தொடர்ந்து தலைமை வகித்து வழிநடத்துவேன்!

### 'சார்க்' மாநாட்டில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு



"இலங்கையில் புதிய அரசு மேற்கொண்டு வரும் அமைதி முயற்சிகளுக்குத் தொடர்ந்து தலைமைத்துவம் கொடுத்து வழிகாட்டுவேன்"

- இவ்வாறு அறிவித்திருக்கின்றார் இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்று காத்மண்டுவில் நடைபெற்ற 'சார்க்' மாநாட்டின் ஆரம்ப நிகழ்ச்சிகளில் உரை நிகழ்த்திய போதே அவர் இப்படித் தெரிவித்தார்.

'சார்க்' அமைப்பின் தலைமைப் பதவியை நேபாள பிரதமரிடம் கையளித்து அவர் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்கு கருத்தொற்றுமையுடன் தீர்வு காணும் வாய்ப்பு இலங்கைக்கு தற்சமயம் கிடைத்துள்ளது.

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

அந்தக் குறிக்கோளை புதிய அரசு அடைவதற்கு எனது வழிகாட்டல், ஆலோசனை, தலைமைத்துவம் என்பவற்றை வழங்கிவருகின்றேன்; தொடர்ந்து வழங்குவேன் - என்றார். (உ-6)



அமரர் குமார் பொன்னம்பலத்தின் இரண்டாவது நினைவுதினத்தையொட்டி அவரது உருவப்படம் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படம்.

## ஒருபுறம் – சமாதானப் பேச்சுக்கு முயற்சி! மறுபுறம் – படைக்குப் பெரும் ஆள்சேர்ப்பு!!

### ஐக்கிய தேசிய முன்னணியின் இரட்டைவேடம் அம்பலம்

கொழும்பு,ஜன.6

ஒரு புறத்தில் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண நோர்வே அரசு ஊடாக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு முயன்றுவரும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு -

மறுபுறத்தில் தனது யுத்த வலுவைக் கூட்டும் நோக்குடன் பெரும் ஆளணி சேர்ப்புக்கு படைகளுக்கும் பொலீஸாருக்கும் அனுமதி வழங்கியிருக்கின்றது.

புதிய அரசின் அனுமதிக்கு இணங்க -

விசேட அதிரடிப்படை, இராணுவத்தின் நிரந்தர காலாட் படைப் பிரிவு, விசேட படைப் பிரிவு, விமானப் படை ஆகியன முழுமூச்சில் ஆள்சேர்ப்பு நடவடிக்கையில் குதித்திருக்கின்றன.

விசேட அதிரடிப்படைக்கு ஆள்களைச் சேர்க்கும் நேர்முகத் தேர்வுகள் நேற்று சிலாபத்தில் ஆரம்பமாகின. எதிர்வரும் 29ஆம் திகதி வரை அம்பாறை உட்பட 18 நகரங்களில் இத்தேர்வுகள் நடைபெறவிருக்கின்றன.

இத்தேர்வுகளுக்கு முன்னோடி (12ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் குமார் நினைவாக நேற்று விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.6

மாமனிதர் அமரர் குமார் பொன்னம்பலத்தின் இரண்டாம் ஆண்டு நினைவுநாளை ஒட்டி விசேட அஞ்சலி நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

நல்லூர் கந்தசுவாமி கோயில், யாழ்.மரியன்னை பேராலயம் உட்பட பல ஆலயங்களில் விசேட பூசைகள் இடம்பெற்றன. இந்தப் பூசைகளில் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் பங்குபற்றினர்.

பிற்பகல் அமரரின் உருவப்படம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இருந்து ஊர்வலமாக நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு மலர் அஞ்சலி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடந்தது. (உ-8-10-51-180)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கிளிநொச்சியிலும் வற்றாப்பளையிலும் இரு ஆலயங்களைத் திருத்த சிமெந்து

## அமைச்சர் மகேஸ்வரன் எடுத்துச் செல்வார்

கொழும்பு,ஜன.6

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள இரு இந்து ஆலயங்களைப் புனரமைக்க சிமெந்து மற்றும் கட்டடப் பொருள்களை எதிர்வரும் 16ஆம் திகதி அங்கு எடுத்துச்செல்ல இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ள கிளிநொச்சி, கந்தசுவாமி கோயில், வற்றாப்பளை அம்மன் கோயில் ஆகியவற்றைப் புனரமைக்கவே கட்டடப்பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அறுநூறு சிமெந்துப் பைகள், இரும்புக் கம்பிகள் ஆகியவற்றை அங்கு எடுத்துச்செல்ல ஏற்பாடாகியுள்ளது. இதைவிட அங்குள்ள ஆலயம் ஒன்றுக்கு ஜெனரேட்டர் ஒன்றும், அதை இயக்குவதற்காக ஐந்து பரல் டீசலும் எடுத்துச் செல்லப்படும்.

இந்தப் பொருள்களுடன் அங்கு செல்லவிருக்கும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இரு ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளையும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கவிருக்கின்றார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இரு அறநெறிப் பாடசாலைகளையும் அவர் ஆரம்பித்து வைப்பார். அந்தப் பாடசாலைகளுக்கான கதிரை, மேசைகளும் மற்றும் தளபாடங்களும் கொழும்பில் இருந்து எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

அந்த மாவட்டங்களில் உள்ள 52 அகதி முகாம்களில் தங்கியுள்ள 6.ஆயிரத்து 487 குடும்பங்களுக்கும் உடுபுடைவைகளை வழங்கவும் அமைச்சர் மகேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வன்னிப் பகுதியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க 7லட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை இரு தமிழ் வர்த்தகர்கள் அமைச்சரிடம் கையளிக்கவிருக்கின்றனர். குழந்தைகளுக்கு வழங்க பால் மா வகைகளையும் அமைச்சர் அங்கு எடுத்துச்செல்லவிருக்கின்றார்.

வன்னிக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்காக 30லட்சம் ரூபாவை இந்து கலாசார அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இதேவேளை -

வன்னி மக்களுக்கு அவசர தேவையாகவுள்ள பொருள்கள் தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் எஸ்.ஜயாத்துரையுடன் அமைச்சர் மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடியுள்ளார்.

(ஐ-3)

# தமிழ் இனத்துக்காகத் துணிந்து நின்று குரல் கொடுத்த மாமனிதர் குமார்

## நினைவுக் கூட்டத்தில் அஞ்சலி உரை

யாழ்ப்பாணம்,ஜன.6

"தெற்கில் பாதுகாப்பற்ற நிலையில் தமிழினம் வாழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில், அந்த இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராக அங்கிருந்தபடியே துணிந்து குரல் கொடுத்த தனித் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்."

- யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.இரவிராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாமனிதர் அமரர் குமார் பொன்னம்பலத்தின் இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே இரவிராஜ் இப்படிக் கூறினார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் இரவிராஜ் மேலும் தெரிவித்ததாவது:-

மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் - பாதுகாப்பற்ற நிலையில் - தமிழினம் வாழ்ந்துகொண்டிருந்த போது அந்த இனம் கீழ்மைப்படுத்தப்படாமல் இருக்கக் குரல்கொடுத்தவர் குமார் பொன்னம்பலம். கடந்த 15 வருடங்களுக்கு மேலாக எமது இளைஞர், யுவதிகளுக்காக இலவசமாக வழக்குகளில் வாதாடி வந்ததுடன் சட்ட ஆலோசனைகளையும் வழங்கி வந்தவர். மூன்றுமொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடிய சட்ட விற்பன்னர். தமிழினத்தின் போராட்டங்கள் பற்றிக் கூட மேல்நீதிமன்றங்களில் துணிந்து எடுத்துக்கூறியவர். இவ்வாறான ஒரு நல்ல தலைவனை இழந்துவிட்டோம் - என்றார்.

### சுரேஷ் உரை

தமிழர் கூட்டமைப்பின் உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(சுரேஷ் அணி) செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது உரையில்-

தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைச் சிங்கள மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தியவர்களில் அமரர் குமார் பொன்னம்பலத்துக்குப் பிரதான பங்குண்டு. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி வலியுறுத்திவந்தவர் அவர். தமிழ் இயக்கங்கள் அனைத்துக்கும் குறிப்பாக விடுதலைப் புலிகள் உட்பட சகல இயக்கங்களுக்குமாகப் பாரபட்சம் காட்டாமல் குரல் கொடுத்துவந்தவர்.

யார் பிழை செய்தாலும் அவர்களில் முகத்துக்கு முன்பே அந்தப் பிழைகளைச் சுட்டிக்காட்டும் தைரியம் மிக்கவர் அவர். தனது இனத்தின் உரிமைக்காக தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கவேண்டும் என்று வாழ்ந்தவர் அமரர் குமார் பொன்னம்பலம் - என்று தெரிவித்தார்.

### சிவஞானம் உரை

சி.வி.கே.சிவஞானம் தனது உரையில் குறிப்பிட்டதாவது:-

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் சொந்தமானவர் அல்லர் அமரர் குமார் பொன்னம்பலம். முழுத் தமிழ் இனத்துக்கும் அவர் சொந்தமானவர். அவர் தனது வாழ்நாள் முழுதும் தமிழ் இனத்தின் விடிவு பற்றியே பேசினார்.

தமிழர்களின் பிரச்சினைகளைப் பற்றிச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறிய அவரின் பேச்சிலும் மூச்சிலும் இரத்தத்திலும் தமிழ் உணர்வு தான் கலந்திருந்தது - என்றார்.

மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வணபிதா சி.ஜி.ஜெயக்குமார் உரையாற்றுகையில் :-

எல்லா மக்களின் மனங்களிலும் இடம்பிடித்தவர்கள்தான் மாமனிதர்கள். இந்த வகையில் அமரர் குமார் பொன்னம்பலத்துக்கு மாமனிதர் என்ற பட்டம் சாலப்பொருத்தமானது. சிறந்த ஆளுமை கொண்ட இவர் தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தவர் என்றார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர் அ.குமாரவேல் பேசுகையில் கூறியதாவது:-

அமரர் குமார் பொன்னம்பலம் தான் கொண்ட கருத்தை எவர் முன்னிலையிலும் துணிந்து எடுத்துக் கூறியவர் என்று சொன்னால் அது மிகையல்ல.

தமிழ் இனம் தன்மானத்துடனும் நீதியாகவும் வாழவேண்டும் என்பதற்காக உலக நாடுகளின் பிரதிநிதிகளிடம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி எடுத்துக்கூறியவர். அத்துடன் தமிழினம் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழவேண்டும் எனவும் அவர் ஆசைப்பட்டார். அந்த ஒற்றுமை இப்பொழுது ஏற்பட்டு அவரது ஆசை நிறைவேறிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என்று கூறிய முதல் தலைவர் அவராவார். விடுதலைப் புலிகளால் மாமனிதர் பட்டம் வழங்கப்பட்ட முதலாவது அரசியல்வாதியும் அமரர் குமார் பொன்னம்பலம்தான் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சிவானந்தமூர்த்தி, மூத்த சட்டத்தரணி எஸ்.கனகரட்ணம், காங்கிரஸ் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஆர்.ஆனந்தராசா, வின்சன் டி போல், பத்திரிகையாளர் ஐயா சச்சிதானந்தம் உட்பட பலர் உரையாற்றினர்

(உ-10-8-180)

பஸ்ஸுடன் கொழுவுப்பட்ட

# முள்கம்பியோடு சேர்ந்து இழுபட்டவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம்,ஜன.6

பஸ்ஸுடன் இழுபட்டு வந்த படையினரின் முள்கம்பிச் சுருளுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்தார்.

சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை கனகசபாபதி (வயது 50) என்ற குடும்பஸ்தரே விபத்து நடந்து ஆறு நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார்.

கடந்த 30 ஆம் திகதி அச்சுவேலி இராச வீதியில் வந்து கொண்டிருந்த போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் பின் பகுதியில் படையினரின் காவலரணில் இருந்த முளகம்பிச் சுருள் கொழுவுப்பட்டு இழுபட்டு வந்ததாகவும் -

இதனைத் தெரியாது சாரதி பஸ்ஸை தொடர்ந்து செலுத்திய போது வீதியில் நின்ற இவர் இந்த முள்கம்பிச் சுருளுக்குள் சிக்குப்பட்டு இவர் நீண்ட தூரம் பஸ்ஸுடன் இழுபட்டுள்ளதாகவும் - கூறப்படுகின்றது.

பிரயாணி ஒருவர் பஸ்ஸில் ஏறுவதற்காக பஸ்ஸை நிறுத்திய போதே இவர் கம்பியோடு சேர்ந்து நீண்ட தூரம் இழுபட்டுவந்தது தெரிய வந்ததாகவும் கூறப்படுகின்றது.

சுயநினைவிழந்த நிலையில் முள்கம்பிச் சுருளுக்குள் இருந்து மீட்கப்பட்ட இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார்.

இவரது சடலம் மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (உ-6-9-15)

# சுரேஷை இந்தச் சூழ்நிலையில் நாடு கடத்துவது நல்லதல்ல

## கனடா தூதருக்குக் கடிதம்

கொழும்பு,ஜன.6

கனடாவில் இருந்து இலங்கையரான சுரேஷ் மாணிக்கவாசகத்தை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதென எடுக்கப்பட்டுள்ள முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

மேற்கண்டவாறு இலங்கைக்கான கனேடிய தூதுவரை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கோரியுள்ளார்.

கனேடிய தூதுவருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டில் சுமுகமான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை.

சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் சுரேஷ் மாணிக்கவாசகத்தை நாடுகடத்துவது சமாதான முயற்சிகளைக் கூடப் பாதிக்கலாம். எனவே அவரை நாடு கடத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அமைச்சர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ-3)

# வாசகர் திருமுகம்

## ரணில் தலைமையிலான அரசில் தமிழ் விவகாரம் யாரிடம்?

திரு.தி.மகேஸ்வரன் இந்து கலாசார அமைச்சராக இருப்பது மகா சந்தோஷம். அவர் எத்தனையோ பணிகளை ஆரம்பித்து விட்டார். இனி நாம் திருக்கேதீச்சரத்துக்கே போகக்கூடிய காலம் சிவராத்திரியுடன் வந்துவிடும் என்றால், அமைச்சரின் சிவத்தொண்டைப் போற்றாமல் இருக்க முடியுமா?

முன்னைய அரசு இந்து கலாசார அமைச்சரிடமே தமிழ் விவகாரத்தையும் வழங்கியது. இப்பொழுது அது யாரிடம் உண்டு எனத் தெரியவில்லை. ஈழத்தவர்கள் சைவமும் தமிழும் போற்றி வளர்த்தவர்கள். இரண்டும ஒரே அமைச்சிடம் இருப்பதே நன்று. இந்து கலாசார அமைச்சர் தமிழ் விவகாரத்தைக் கேட்டு வாங்கினாலும் பரவாயில்லை. அவர் தமிழ்த் தொண்டும் செய்வதற்கு வல்லமையுடையவர். இதனில் அக்கறை கொள்வாரா?

மூளாய் பண்டிதர் கு.சுந்தரமூர்த்தி.

## மக்கள் வேதனையை அமைச்சர் அறிந்தவரா?

28.12.2001ஆம் திகதிய உதயனின் "வாசகர் திருமுகம்" பகுதியில் "கண்ணை மூடிக்கொண்டு குறைகூறாதீர்கள்" என்ற தலைப்பில் வெளியான கடிதத்துடன் சம்பந்தப்பட்ட சில விடயங்களை உங்கள் முன் வைக்கின்றேன்.

போரினால் தூர்ந்து போயிருந்த யாழ்ப்பாணத்தை மீண்டும் கட்டி எழுப்பியதை மக்கள் நிச்சயமாக மறக்கமாட்டார்கள். இளைஞர், யுவதிகளுக்கு வேலை கொடுத்தும், ஏழைகளுக்கு உதவி புரிந்தும் இருக்கும் அதேவேளையில் மக்கள்படும் உண்மையான வேதனையை அமைச்சர் அறிந்தவரா என்றால் அது கேள்விக்குறியே.

1995இல் காணாமல் போனவர்களுக்கு அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார்? செம்மணிப் புதைகுழியை மூடி மறைக்காமல் நீதி வழங்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்தாரா? கைதான அப்பாவித் தமிழர்களை யாவது விடுவித்தாரா? சஞ்சீவன் போன்ற மாணவர் கொலை செய்யப்படும் போது அமைச்சர் எங்கே போனார்? குறிப்பாக காணாமல் போதல், பாலியல் வல்லுறவு என்பன நடைபெற்றபோது அமைச்சர் என்ன செய்தார்?

இதுதான் தமிழ்த் தாய்மார்களுடைய வேதனை. யாழ்.மண்ணில் இன்னும் நிரந்தர சமாதானம் கிடைக்கவில்லை. இந்த வேளையில் கோயில்கள் தேவாலயங்களைப் பெரிதாகக் கட்டவேண்டியது அவசியம்தானா? அதுதான் போகட்டும் அதற்கு பத்திரிகையில் இவ்வளவு பணம் செலவு செய்து பாராட்டி வாழ்த்த வேண்டுமா? சம்பந்தப்பட்டவர்கள் அதைக் கடிதம் மூலம் தெரிவித்து அந்த பணத்தை விசேட ஒரு நாளில் கோயிலில் - தேவாலயங்களில் - தானதர்மம் செய்தால் கட்டாயம் புண்ணியமாவது கிடைக்கும்.

இல்லையேல் அந்தப்பணத்தை ஓர் ஏழைப்பிள்ளையின் கல்விக்குச் செலவுசெய்து அவனை ஓர் அறிஞனாக்கி எப்பவோ எமது தமிழ் மண்ணில் பல சான்றோரை உருவாக்கி இருக்கலாம். இனியாவது இதைச் செய்யுங்கள். இதுதான் தன்மானம் உள்ள தமிழனுக்கு அழகு.

அதுமட்டுமா, யாழ்.சேவையில் குடாநாட்டுச்செய்தி என ஈ.பி.டி.பி. சார்பானவற்றை மட்டுமே சொன்னார்கள். அது போகட்டும். யாழ். சேவையினருக்கு யாழ்.குடாநாட்டில் ஈ.பி.டி.பியை மட்டுமே தெரிந்ததே தவிர இங்கிருக்கும் தமிழர்கள் பற்றி எதுவுமே தெரியாது போய் விட்டது. அது பற்றித் தெரிந்திருந்தால் குடாநாட்டுச் செய்தியிலே எவ்வளவோ சொல்லியிருப்பார்கள்.

யாழ் மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், "தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு நாங்கள் வந்தவுடன்தான் சுதந்திரம் கிடைத்தது" என்று கூறினார். ஆனால் அவருக்கு தெரியாது 1995இற்கு முன்னர் எந்தவொரு இளம் பெண்ணும் நள்ளிரவு 12 மணிக்குக் கூட தனியாக போய்வரும் காலம் இருந்தது என்பது. ஆனால் தற்போது பெண்பிள்ளைகள் வெளியே நடமாடவே பயப்படுகிறார்கள். இதுதான் ஈ.பி.டி.பியினர் எமக்குத் தந்த சுதந்திரமா?.

யாழ்ப்பாணம் எம்.மதுமிதா

## அரச நியமனங்கள் மீள்பரிசீலனை; விசாரணைக் குழுக்கள் தேவை

புதிதாகப் பதவி ஏற்கின்ற அரசுகள் முன்னைய ஆட்சிக்காலத்தில் நடந்த நியமனங்கள், பதவிஉயர்வுகள் பற்றி மீள் பரிசீலனை செய்வது வழக்கமாகிவிட்டது. நியமன சட்டதிட்டங்கள், கல்வித் தகைமை, வயது என்பன சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட இடமில்லாமல் இருக்கும்.

கடந்த அரசாங்கம் ஒருவருட காலத்தில் செய்த நியமனங்கள் சரிதானா என்பதை மீள் பரிசீலனை செய்வது அவசியம்தான். சமுர்த்தி உத்தியோகத்தர் நியமனத்தைப் பரிசீலனை செய்வதற்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மூவரை அமைச்சர் நியமித்துள்ளார். மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர், நிர்வாக அதிகாரி ஆகியோரே அவர்களாவர்.

சமுர்த்தி நியமனங்கள் நாடு முழுவதிலும் அப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சிலேயே வழங்கப்பட்டன. பிரதேச செயலர் அவர்கள் கொடுத்த நியமனங்களையே அங்கீகரித்ததை எவரும் மறுக்க முடியாது. சமுர்த்தி உத்தியோகத்தர் நியமனங்கள் பற்றி, பரிசீலிக்கும் போது கல்வித்தகைமை, வயதுக் கட்டுப்பாடு மீறப்பட்டமை வெளிச்சத்திற்கு வரும். அப்போது தகைமையுள்ளோர் நியமனம் பெற வாய்ப்பு ஏற்படுமல்லவா?

யாழ்.மாவட்ட நியமனங்கள், பதவி உயர்வுகள் சட்டப்படி கொடுக்கப்பட்டனவா என்பது மிக முக்கியமான ஒன்றாகும். பத்து வருடம், ஐந்து வருடம் எதுவித வேதனமுமின்றி படிப்பித்த தொண்டராசிரியர் நியமனம் பெறமுடியவில்லை. பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக இருக்காத பலர் சிலரின் செல்வாக்கினால், அதிபரின் 'கடிதத்துடன் நியமனம் பெற்றதாக ஆதங்கம் ஏற்பட்டதை எளிதில் எவரும் மறந்துவிட முடியாது.

குடாநாட்டில் 1996லிருந்து 1999வரை பட்டதாரிகளான ஆயிரத்து 800க்கும் அதிகமானோர் வேலையில்லாமல் விரக்தியுற்றிருக்கிறார்கள். யாழ். மாவட்டத்தில் ஆசிரிய நியமனங்களுக்கு இடமில்லை எனவும் பேசிக்கொள்கிறார்கள். எனவே தொண்டராசிரியர் நியமனங்கள் பற்றி விவரிக்க ஒரு விசாரணைச் சபையை அரசு நியமிக்க வேண்டும். இதனால் வேலையில்லாதிருக்கும் பட்டதாரிகள் வேலை பெறுவதற்கு வாய்ப்பேற்படும்.

கடந்த கால வங்கி நியமனங்களில் சரியான கல்வித் தகைமை பேணப்பட்டதா என்பதையும், உள்ளூராட்சிச் சபையில் கொடுக்கப்பட்ட நியமனங்கள் கல்வித்தகைமை, வயது ஆகியன சரியாக இருந்தனவா என்பதையும் பரிசீலனை செய்து பார்க்க முன்வர வேண்டும்.

இந்த நியமனங்களை மீள்பரிசீலனை செய்வதால் தக்க கல்வித் தகைமையிருந்தும் புறக்கணிக்கப்பட்டோர் பயன்பெறுவரென்பதே எனது கருத்தாகும். சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இக்கடிதம் சமர்ப்பணம்.

ஆனைக்கோட்டை. ந.சிவபாதம்.



நேபாளத்தில் நடைபெற்று வரும் 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்கள் புகைப்படத்துக்கு 'போஸ்' கொடுத்த போது கூட இந்தியப் பிரதமரும், பாகிஸ்தான் அதிபரும் இரு துருவங்களாக நின்ற காட்சி.

# வாஜ்பாயுடனான சந்திப்பை தவிர்க்க முஷாரப் தந்திரம்?



காத்மண்டு,ஜன.6

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் நேபாளம் சென்றடைவதில் ஏற்பட்ட தாமதத்தால் 'சார்க்' நாடுகளின் தலைவர்களுக்கான விருந்துபசாரம் இடம் பெறமுடியாது போனது.

பாகிஸ்தானிய விமானங்கள் தனது வான்பரப்பைப் பயன்படுத்த இந்தியா தடைவிதித்துள்ளது. இதனால் சீனா வழியாக நேபாளத்துக்கு முஷாரப் வர நேர்ந்ததால் அவரால் குறித்த சமயத்தில் நேபாளத்தை அடைய முடியவில்லை.

இதன் காரணமாகவே 'சார்க்' உச்சி மாநாடு ஒரு நாள் தாமதமாக நடந்தது. அத்துடன் தலைவர்களுக்கான சம்பிரதாயபூர்வ விருந்துபசாரத்தை ரத்துச்செய்ய வேண்டியிருந்தது.

'சார்க்' உச்சி மாநாடுகளின் தொடக்க தினத்தின் முதல்நாள் நடைபெறும விருந்துபசாரத்தில் இடம்பெறும் தலைவர்களிடையேயான சந்திப்புகள் எதிர்பார்ப்புக்குரியவையாகும்.

தற்போது இந்தியா பாகிஸ்தான் இடையே உறவுகள் சீர்குலைந்த நிலையில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் - முஷாரப் சந்திப்பு பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டது.

வாஜ்பாயுடனான நேரடி உரையாடலைத் தவிர்ப்பதற்காகவே, முஷாரப் தாமதமாகவே நேபாளத்தைச் சென்றடைந்ததாகக் கருதப்படுகிறது.(ஒ-4)

# அமெரிக்கா கண்ணில் மண் தூவிவிட்டு தப்பிச் சென்றார் தலிபான் தலைவர்!

காபூல்,ஜன.6

ஆப்கானிஸ்தானில் தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஓமர் அமெரிக்கப் படைகளின் சுற்றி வளைப்பிலிருந்து தப்பி அடையாளம் தெரியாத இடமொன்றுக்குச் சென்றுவிட்டதாக ஆப்கான் புலனாய்வுத்துறை அதிகாரி நஸ்ரதுல்லா நஸ்ரத் தெரிவித்துள்ளார்.


கந்தகாரில் இருந்து வடமேற்கே 160 கிலோ மீற்றர்கள் தொலைவில் ஹெல்மண்ட் பிரதேசத்தில் பஹ்ரான் மலைப் பகுதியில் ஒமர் பதுங்கியிருப்பதாக முன்னர் நம்பப்பட்டது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில், இப்பகுதியில் அமெரிக்க விமானங்கள் வான் தாக்குதல்களை நடத்தி வந்தன. அத்துடன் தரைப்படையினர் அங்கிருந்து எவரும் வெளியேறாதபடி சுற்றி வளைத்து ஒமரை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இதைவிட ஒமரை எதிர்க்கும் தலிபான் தளபதிகளுடன் காபூலில் இருந்து சென்ற குழு ஒன்று ஒமரைப் பிடிப்பது குறித்து பேச்சு நடத்தி வந்தது.

இந்த நிலையில் பஹ்ரென் மலைப் பகுதியில் இருந்து ஓமர் பாதுகாப்பாக வெளியேறி விட்டதாகவும் -

அவர் எந்தத்திசையில், எங்கு சென்றார் என்பது எவருக்கும் தெரியாதென றும் -

காபூலில் இருந்து பேச்சு நடத்தச் சென்ற குழு தெரிவித்ததாக நஸ்ரதுல்லா மேலும் தெரிவித்தார்.



சரணடைந்து காபூல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தலிபான் போராளிகள் சிலர் கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டனர். காபூல் சிறையின் வெளியே விடுதலையான அவர்கள் தொழுகை நடத்திய போது எடுத்த படம்.

முல்லா ஓமர் மற்றும் 4 தலிபான் மெய்க்காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றதாக உறுதி செய்யப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது.

சுமார் ஆயிரத்து 500 தலிபான் வீரர்கள் தன்னுடன் இருப்பதாக ஓமா சமீபத்தில் கூறியிருந்ததாகவும் -

அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானின் புதிய அரசிடம் தற்போது ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்து விட்டதாகவும் -

நஸ்ரதுல்லா மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-4)

# ஆப்கான் துப்பாக்கிச் சண்டையில் முதல்முறையாக அமெரிக்கர் பலி!

காபூல்,ஜன.6

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள படை நடவடிக்கையின்போது நேரடித் துப்பாக்கிச் சமரில் முதல் தடவையாக அமெரிக்க சிறப்புப்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

முதல் தர சார்ஜெண்ட் நாதன் றோஸ் சப்மான் (வயது 31) என்பவரே நேற்றுமுன்தினம் கர்டேஜ் நகரருகே தலிபான்களுடன் இடம்பெற்ற நேரடி மோதலில் உயிரிழந்தார்.

ஆப்கான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தத்தொடங்கிய 90 நாள்களில் அங்கு நேரடி துப்பாக்கிச் சமரில் உயிரிழந்த முதல் அமெரிக்க வீரர் இவராவார். [illegible]ந்தச் சமரில் சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவரும் காயமடைந்தார்.

முன்னதாக போர் நடவடிக்கைகளின்போது நிகழ்ந்த மோதலற்ற சம்பவங்களில் சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவரும், 9 அமெரிக்க வீரர்களும் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்து மத சம்பிரதாயங்களின்படி 11ஆவது 'சார்க்' மாநாடு ஆரம்பம்

காத்மண்டு,ஜன.6

தெற்காசியப் பிராந்தியத்தில் நிலவும் பயங்கரவாதத்தை ஒடுக்க 'சார்க்' நாடுகள் ஒருங்கிணைந்து போர் தொடுக்க வேண்டும்.

'சார்க்' உச்சிமாநாட்டை நேற்றுத தொடக்கி வைத்து உரையாற்றிய நேபாளப் பிரதமர் ஷேர் பகாதூர் துவாபா இந்த அறை கூவலை விடுத்தார்.

காத்மண்டுவில் உள்ள மன்னர் பிரேந்திரா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 'சார்க்' உச்சிமாநாடு நேற்று ஆரம்பமானது.

'சார்க்'கின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து நேபாளப் பிரதமர் துவாபா பெற்றுக் கொண்டார்.

வேதபாராயணம் உட்பட இந்துமத சம்பிரதாயங்கள் நிகழ, நேபாளப் பிரதமர் ஷேர் பகாதூர் துவாபா குத்து விளக்கேற்றி 'சார்க்' உச்சி மாநாட்டை தொடக்கி வைத்தார்.

மாநாட்டின் தொடக்கத்தில் நேபாள மன்னர் குடும்ப மறைவுக்கு தலைவர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

தொடக்கவுரையில் துவாபா மேலும் பேசுகையில்:-

பயங்கரவாதத்தை வேரோடு முறியடிக்க தேவையான சட்டங்கள் 'சார்க்' நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பயங்கரவாதம் அனைத்து முன்னேற்றங்களையும் தடுக்கிறது. தெற்காசியப் பிராந்தியத்தில் மக்கள் நலன்களைக் காக்க வெளிநாட்டு முதலீடு, வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஒருங்கிணைந்த ஒருமைப்பாடு அவசியம். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ)

# சீன ஆயரின் இறுதிச்சடங்கில் மக்கள் பங்குபற்றத் தடை!

வத்திக்கான்,ஜன.6

சீனாவில் கத்தோலிக்க ஆயர் ஒருவரின் இறுதிச்சடங்கில் - பொலீஸ் தடையையும் மீறி சுமார் மூவாயிரம் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

பெய்ஜிங் ஆயர் மொன்சிவனர் மடியா டி ஷாவ்டே என்பவர் லாஞ்சி கூரில் உள்ள ஒரு மருத்துவமனையில் சிறுநீரகக் கோளாறு காரணமாகக் கடந்த புதன்கிழமை உயிரிழந்தார். அவரது இறுதிச்சடங்கு லாஞ்சி கூரில் நடந்தது.

லாஞ்சிகூரின் வெளியே இருந்து மக்கள் வந்து மரணச்சடங்கில் கலந்துகொள்ள சீனப்பொலீஸார் தடை விதித்தனர். இந்த கிராமத்துக்கு வரும் பாதைகளை மூடிய பொலீஸார், வெளியார் கிராமத்துக்குள் நுழையாதவாறு கண்காணித்தனர்.

- ஆயினும் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் தடையை மீறி கிராமத்துக்குள் சென்று ஆயரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டனர்.

கத்தோலிக்கரின் மதத் தலைமையிடமான வத்திக்கானுடன் சீனா சுமார் 50வருடங்களுக்கு முன்னர் உறவைத் துண்டித்துக்கொண்டது. அது முதல் சீன தேவாலயங்கள் பாப்பரசரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில்லை.

இங்க நிலையில் சட்டவிரோத மதப் பிரசாரத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆயர் ஷாவ்டே நீண்டகாலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அப்போது நோய் வாய்ப்பட்டதால் அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இறந்த ஆயரைப் போலவே மேலும் பல கத்தோலிக்க சீன மத குருமார்கள் பாப்பரசருக்கு விசுவாசமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஆஸ்திரேலிய காட்டுத் தீ!

சிட்னி,ஜன.6

ஆஸ்திரேலியாவின் சவுத் வேல்ஸ் மாகாணத்தில் மூண்டு பரவிவரும் காட்டுத் தீ தற்போது நகரப் பகுதியையும் பாதிக்கத் தொடங்கியுள்ள தர்ல் நகரப் பகுதி மக்கள் அனைவரும் அருகே உள்ள கடற்கரையில் தஞ்சமடைந்துள்ளனர். (ஒ-4)

## இந்தியாவில் பிளயர்

பெங்களூர்,ஜன.6

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நேற்று பெங்களூரில் வணிக நட்பு ஒத்துழைப்பு மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். (ஒ-4)

# அமைதிப்படை ஒப்பந்தம் காபூலில் கையெழுத்தானது

காபூல்,ஜன.6

ஆப்கானிஸ்தானில் அமைதிப் படையை நிலைநிறுத்துவது தொடர்பான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் காபூலில் 'கையெழுத்தானது.



ஒப்பந்தம் கையெழுத்தான போது....

ஆப்கான் உள்துறை அமைச்சர் யூனுஸ் குனோனி மற்றும் அமைதிப் படைக்கு தலைமை தாங்கும் பிரிட்டிஷ் தளபதி ஜெனரல் ஜோன் மகொல் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டனர்.

- ✪ ஆப்கானின் புதிய இடைக் கால அரசுக்கு ஒத்துழைத்தல்.
- ✪ கட்டடங்கள் மற்றும் நெடுஞ் சாலைகளைப் பாதுகாத்தல்.
- ✪ வீதிச் சோதனைகளை மேற் கொள்ளல்.
- ✪ ஆப்கான் பாதுகாப்புப் படையினருக்குப் பயிற்சியளித்தல்.
- ✪ புனரமைப்புக்கு உதவுதல்

- ஆகிய பணிகளில் அமைதிப்படை ஈடுபட ஒப்பந்தம் வழிசெய்கிறது.

தெற்கு ஆப்கானிஸ்தானில் இன்னமும் போராடி வரும் தலிபான்களை சரணடைய வைக்க பேச்சுக்கள் நடைபெறும் சமயத்தில் அமைதிப் படை குறித்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதனால் தலிபான்களை சரணடைய வைக்கும் பேச்சு தொடருமா? அல்லது அந்த விடயம் அமைதிப் படையிடம் விடப்படுமா? - என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

'இராணுவ - தொழில்நுட்ப உடன்படிக்கை' என பெயரிடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தின்படி சுமார் 4 ஆயிரத்து 500 சர்வதேச பாதுகாப்பு உதவிப்படையினர் ஆப்கானில் பணியாற்றுவர்.

ஆப்கானின் ஆயுதக்குழுக்கள் தத்தமது முகாம்களுக்குள் முடங்கவும் - ஆப்கான் பொலீஸார் உள்ளூர் பாதுகாப்பில் ஈடுபடவும் - ஒப்பந்தம் வகை செய்கிறது.

6 மாதகாலம் பணியில் ஈடுபடத் திட்டமிடப்பட்டுள்ள அமைதிப் படைக்கு முதல் 3 மாதங்கள் பிரிட்டன் தலைமை வகிக்கும்.

(ஒ)

# பொய்யரை அடையாளம் காண புதிய ரகக் கருவி கண்டுபிடிப்பு!

லண்டன்,ஜன.6

பொய் கூறுபவர்களை கண்டுபிடிக்கும் புது ரகக் கருவி ஒன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்தக் கருவி விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

நாசகார வேலைகளுடன் தொடர்புள்ள நபர் ஒருவர் பொய் சொல்லும் போது அவரது கண்களைச் சுற்றி உள்ள பகுதிகளில் இரத்தோட்டம் அதிகரிக்கும். அதனால் அப்பகுதிகள் செந்நிறமாவதுடன் வெப்ப நிலையும் அதிகரிக்கும். இந்த இரு இயல்புகளையும் நுட்பமாகச் சோதனை செய்து அதனைக் கொண்டு அந்த நபர் பொய் சொல்லுகிறாரா? இல்லையா? என்பதை புதிய கருவி கண்டுபிடித்துவிடும்.

பல்வேறு குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டவர்களிலும், அப்பாவிகளிலும் இதனைப் பரிசோதித்துப் பார்த்ததில் திருப்தியான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பொய் கூறுபவரைக் கண்டுபிடிப்பதில் 75 வீதமும் - அப்பாவியைக் கண்டுபிடிப்பதில் 90 வீதமும் - இந்த கருவிதிறன் கொண்டுள்ளது. (ஒ)

## 'குளோனிங்' டொலிக்கு முழங்கால் வாதம்

முதன்முதலாக 'குளோனிங்' முறை மூலம் உருவாக்கப்பட்ட 'டொலி' என்ற செம்மறியாடு முழங்கால் வாதத்தால் அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்பட்



டது. வயதானவர்களுக்கு ஏற்படும் முழங்கால் வாதம் சிறுவயதிலேயே டொலிக்கு ஏற்பட்டிருப்பது கவலை தருவதாகவும் -

குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டது இதற்குக் காரணமா என்று ஆராயப்படுவதாகவும் -

கூறப்படுகிறது. (ஒ)

# கலைப் பாரம்பரியத்தைப் பேணுவதற்கு தமிழகக் கலைஞர்கள் வருகை உதவும்

## பாராட்டுவிழாவில் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம்,ஜன.6

தமிழகக் கலைஞர்கள் இலங்கை வந்து கலை நிகழ்வுகளை நிகழ்த்தும் மரபு மீண்டும் உருவாக வேண்டும். இதன்மூலமே நீண்டதொரு கலைப பாரம்பரியத்தைப் பேணிக்கொள்ள முடியும்.

- இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த தமிழகத்தைச் சேர்ந்த நாதஸ்வர, தவில் கலைஞர்களுக்கான பாராட்டுவிழா கடந்த வியாழன் அன்று காலை 9 மணிக்குப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை வளாகத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன நுண்கலைக்கழகமும், யாழ். இந்து சமயப் பேரவையும் இணைந்து நடத்திய இந்த விழாவில் துணை வேந்தர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை பல அரிய பணிகளை எமது மண்ணில் ஆற்றிவருகிறது. அவற்றில் இந்துசமயப் பேரவையுடன் இணைந்து நடத்தும் இசைவிருந்தும் பாராட்டும் எமக்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளது.

முன்னைய காலங்களில் இசைக் கலைஞர்கள் எமது நாட்டுக்குத் தாராளமாக வந்து கலைநிகழ்ச்சிகளை நடததியதுபோல் மீண்டும் எமது நாட்டில் உள்ள சூழ்நிலை மாறவேண்டும் - என்றார்.

யாழ்.இந்துசமயப் பேரவையின் தலைவர் அருட்கவி.சீ.விநாசித்தம்பி தனது உரையில்:-

ஈழத்தமிழ் மக்களின் இன்னல்கள் மறைந்து, நாட்டில் சமாதானம் மலர்வதற்கான நல்ல அறிகுறியாகத் தமிழக நாதஸ்வரக் கலைஞர்கள் யாழ்ப்பாண மண்ணில் மங்கள வாத்தியத்தை இசைக்கின்றார்கள். நம் நாட்டில் மிகவிரைவில் அமைதி நிலவும் என்பதற்கு இது நல்ல அறிகுறியாக அமைகிறது.

எமது நாடு இன்று வேண்டிநிற்பது சமாதானமே. இதற்காகவே நாம் அனைவரும் பிரார்த்தித்தபடி இருக்கிறோம். அந்தவகையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவாதிரை விழாவுக்குத் தமிழக மாம்பல நாதஸ்வர வித்துவான்கள் எம்.கே.எஸ்.சிவா சகோதரர்களும், தவிலிசைச் சக்கரவர்த்தி ரி.ஜி.முத்துக்குமாரசாமி, என்.ஆர்.ராமதாஸ் அவர்களும் இங்கு வந்து இசைமாரி பொழிகின்றனர்.

யாழ்.பல்கலைக்கழக நடன - சித்திர வடிவமைப்புத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா பேசுகையில்:-

எங்கள் நாட்டிலுள்ள கலைஞர்களும், தமிழகக் கலைஞர்களும் இணைந்து எமது கலைப் பண்பாடுகளை வளர்ப்பதற்கு தமிழகக் கலைஞர்களின் வருகை அவசியமானது. நாம் எமது பண்பாடுகளை வளர்ப்பதற்கு யாழ்.இந்துசமயப் பேரவையையும், யாழ்.பல்கலைக்கழகத்தையும் நன்கு பயன்படுத்தவேண்டும் என்றார்.

யாழ்.இந்துசமயப் பேரவை - உப தலைவர் சி.க.சிற்றம்பலம் பேசுகையில்:-

எமது பல்வேறுபட்ட பணிகளில் இசைத்துறைக்கு ஆதரவு வழங்குவதும் எமது தலையாய கடமை. இதனை வளர்ப்பதற்கு மக்களின் பேராதரவு அவசியம் - என்றார்.

பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் தனதுரையில்:-

எத்தகைய இன்னல் நிறைந்த சூழ்நிலையிலும் எமது கலை பண்பாடுகளை எமது மக்கள் பேணியே தீருவார்கள் என்பதற்குத் தமிழகக் கலைஞர்களின் வருகை சான்றாகிறது.

இன்று எமக்குள்ள நெருக்கடியான சூழ்நிலையில் எமது பண்பாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்குத் தமிழகக் கலைஞர்கள் தாராளமாக இங்கு வர வேண்டும். அதேபோல இங்குள்ள கலைஞர்களும் அங்கு செல்ல வேண்டும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் இசைப் பேரசு மு. நவரத்தினம் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். (ஐ-7)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.நச்சமோட்டை சம்றொக் கல்வி நிலையத்தின் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்வி நிறுவனத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெவுள்ளது.

நிறுவன இயக்குநர் த.பீற்றர் சண் விஜயசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் புனித யாகப்பர் ஆலய உதவிப்பங்குத் தந்தை அருட்தந்தை எஸ்.அருட் செல்வன் பிரதம விருந்தினராகவும், சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அதிபர் எஸ்.எஸ்.தங்கராஜா, சென். ஜோசப் மகா வித்தியாலய அதிபர் எம்.ஞானப்பிரகாசம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-7)

## 68 நோயாளிகள் வவுனியா வருகை!

வவுனியா,ஜன.6

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச சேர்ந்த 68 நோயாளிகள் நேற்றுமுன்தினம் வவுனியா நகருக்குள் அனுமதிக்கப்பட்டனர். வைத்திய சிகிச்சைக்காக இந்நோயாளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.(ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வெலிங்டன் சந்திக்கு அருகில் உள்ள டி.எம்.ஐ.கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தமிழிலக்கிய விழாவில் கலந்து கொள்ள திருகோணமலை செல்வது குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-7)


SAYANDHA SERVICE

விசாலமான புதிய அலங்காரப் பந்தல் வகை, பிளாஸ்ரிக், இரும்புக் கதிரைகள், மேடை, மணவறை, அலங்காரக் கதிரை, சமையற்பாத்திரங்கள், சிங்கப்பூர் சோடினை, மாலை வகை, பாய்கள், லைற்செட், தலைநகை, காற்சலங்கை, பூக்கொத்து, குத்துவிளக்கு, வெள்ளி, மாபிள் பாத்திரங்கள் வாடகைக்கு உண்டு. ஒரே இடத்தில் உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளலாம்.

திரு.க.அருந்தவராஜா, 18/4-1, சீனியர் லேன், கலட்டி.

A,இல. 2, பிரம்படி ஒழுங்கை, தலையாழி, கொக்குவில்.

(96757)


### திருவாசக முற்றோதல்

சங்கானை தெற்கு ஓடக்கரை விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன் ஆலயத்தில்

திருவாசக முற்றோதல் விழா எதிர்வரும் (09-01-2002) புதன்கிழமை காலை 8.00 மணி முதல் நடைபெறவுள்ளது. சிவனடியார்கள் அனைவரும் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பிக்கும்வண்ணம் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இறைபணியில் நா.இராமநாதன்
*ஆலய நிர்வாகி.*

(96753)

### பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



பெற்றவர்கள் பேருவகை கொண்டிட
கற்றவர்கள் களிப்புடன் போற்றிட
உற்றவர்கள் உவகையுடன் வாழ்த்திட
சிறப்புடன்முதுகலைமாணி
பட்டம்பெற்ற
குருநாதர் கிருஷாந்தி ரவீந்திரா
எம் ஆசான் பற்பல பதவிகள், பட்டங்கள்
மேலும் பெற்று நானிலம் போற்றிட நலம் பல பெற்றிட மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துகிறேன்.

- மாணவி.

*15/1, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

(96733)

### கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்
திரு.T.பிறேம்குமார் அவர்களின்
அன்புத் தந்தையார்

**கிருஷ்ணர் துரைராஜா**

அவர்களின் மறைவினால் நாம் பெரிதும் துயரடைகின்றோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

- பாதுகாப்பு உத்தியோகத்தர்
நலன்புரிச்சங்கம், பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ்.பல்கலைக் கழகம்.

(96752)

### எமது விழிநீர் சொரியும் கண்ணீர்ப் பூக்கள்

எமது ஆருயிர் நண்பி
த.பர்மிலாவின் அன்புத் தந்தையார்

**தம்பிராஜா** அவர்கள்

04.01.2002 அன்று அரனடி அடைந்ததையிட்டு அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2001 உயிரியல் பிரிவு மாணவிகள்,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

(96735)

சமாதான சகவாழ்வினை சகலருக்கும் நல்கப் பிறந்த புத்தாண்டை வரவேற்கும் வகையிலும், சர்வமத ஒற்றுமையை வெளிக்காட்டும் முகமாகவும் நல்லூர் றோட்டரக்ட் கழகத்தினரால் நடத்தப்படும்

### - ஒளிவிழா -

இடம்: புனித பத்திரிசியார் கல்லூரி
நாள்: இன்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.30 மணி

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

- நல்லூர் றோட்டரக்ட் கழகம்.


*விளம்பர அன்பளிப்பு:*

சிறி ராஜன் பான்சி ஹவுஸ்

அன்பளிப்புப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் விற்பனையாளர்.

65, 66, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(C/20105)



MATHS CENTER A/L 2004

M.M.V. Road, Nelliady.

| கலைப்பிரிவு | வர்த்தகப்பிரிவு |
| --- | --- |
| பொருளியல்:- | திரு.அன்ரனி |
| அளவையியல்: திரு.பிரபாநந்தன் | கணக்கீடு: திரு.பார்த்திபன் |
| தமிழ்: திரு.அகிலன் | வணிகக் கல்வி: திரு.உதயமோகன் |
| இந்துநாகரிகம்: திரு.இராஜேஸ்கண்ணா | வணிகப் புள்ளிவிவரவியல்: திரு.தவநேசன் |
| நாடக அரங்கியல்: திரு.பிரதீபன் | |
| அரசியல்: திரு.சந்துரு | |
| ஆரம்பம்:- 09-01-2002 (ப.நே.) புதன் காலை 7.00 | ஆரம்பம்:- 09-01-2002 (ப.நே.) புதன் காலை 8.00 |

(96748)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்

புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தான புனரமைப்பு வேலைகளுக்கும் புங்குடுதீவு தல்லையப்பற்று சனசமூக நிலையத்தின் புதிய கட்டடம் அமைப்பதற்குமாக நிதியினை தந்து உதவியமைக்காக,



ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும்
முன்னாள் அமைச்சருமான
உயர்திரு.
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

வேலணைப் பிரதேச சபைத் தலைவர்
**திரு.ந.கருணாகரகுருமூர்த்தி**
அவர்களையும்





ஈ.பி.டி.பியின் புங்குடுதீவுப் பொறுப்பாளர்
திரு.சிவராசா (போல்) அவர்களையும்

*பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தான பரிபாலன சபையும்,
தல்லையப்பற்று சனசமூக நிலைய நிர்வாகமும்.

(96751)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 - 03 - 1915

மறைவு 18 - 12 - 2000



**அமரர் பொன்னையா கணபதிப்பிள்ளை**

*(பிரித்தானியர் ஆட்சியில் பிரதமலிகிதர் திருமலைத்துறைமுகம், பிரத்தியேக ஆங்கில ஆசிரியர்)*

திதி: 06.01.2002

ஆலமரமென வளர்ந்தீர்கள்!
விழுதுகளென விதைபரப்பினீர்கள்!
நாம் இன்று உலகெலாம் பரந்துள்ளோம்!
ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுடன்...

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

திருமதி சர்வேஸ்வர லலிதா கமலநாதன்
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை,
உற்றார், உறவினர்.

(96742)

உதயன்

## அமைதிப் பேச்சு சுமுகமாக நடக்க...!

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கையின் புதிய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகளுக்கு கால்கோள் இடும் வகையில் நோர்வேயின் தூதுக்குழு நேற்றுமுன்தினம் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கின்றது.

இந்தப் பேச்சுக்களின்போது மூன்று முக்கிய விடயங்களைத் தான் வலியுறுத்தியதாக அன்ரன் பாலசிங்கம் கூறியிருக்கின்றார்.

புலிகள் மீதான தடையை நீக்குதல், பொருளாதாரத் தடையை முற்றாக விலக்குதல், மீன்பிடி - போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை அகற்றுதல் ஆகியவை அவை.

பேச்சுக்கான உகந்த சூழ்நிலையைப் பேணுவதற்காகத் தற்போது இருதரப்பினாலும் தனித்தனியாக அறிவிக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்தம் மற்றும் மோதல் தவிர்ப்புப் பிரகடனம் ஆகியவற்றை ஒருங்கிணைந்த ஏற்பாடு ஒன்றின் கீழ் கொண்டுவரவேண்டியதன் அவசியத்தையும் அவர் இந்தப் பேச்சுக்களில் வலியுறுத்தியிருக்கின்றார்.

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது தொடர்பாக புதிய அரசு விடுத்திருக்கும் ஆர்ப்பாட்டமான அறிவிப்பு விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தும் அளவுக்கு அமையவில்லை என்பது கண்கூடு.

1994இல் பொ.ஐ.மு. அரசு, புலிகளுடன் பேச்சு நடத்திய சமயம் விடுத்த பொருளாதாரத் தடைத் தளர்வு பற்றிய அறிவிப்புப் போன்றதொரு பிரகடனத்தைத்தான் -

அப்போது புலிகளைத் திருப்திப்படுத்தத் தவறிய - கண்கட்டுவித்தை போன்ற - அறிவிப்பைத்தான் -

இப்போதைய ரணிலின் அரசும் விடுத்திருக்கின்றது - பெரிய மாற்றங்கள் ஏதுமின்றி.

பொதுமக்களின் அன்றாட வாழ்வுக்கு அத்தியாவசியமான சீமெந்து, எரிபொருள் போன்றவற்றிற்குக் கட்டுப்பாடுகளை விதித்து, அவற்றின் விநியோகத்தை மட்டுப்படுத்தி, ஏதோ ஒருவகையில் பொருளாதாரத் தடையைத் தொடரச் செய்யும் அரச உயர்பீடத்தின் ஏமாற்று நடவடிக்கைக்குத் தாங்கள் ஆளாகத் தயாரில்லை என்பது புலிகளின் தெளிவான நிலைப்பாடு.

என்றாலும் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பக்கத்திலிருக்கும் நடைமுறைப் பிரச்சினைகளையும் புலிகள் புரிந்துகொள்ளத் தவறவில்லை எனத் தெரிகின்றது.

1994இல் பொ.ஐ.மு. அரசு புலிகளுடன் பேச்சு நடத்திய காலத்தில் விடுத்த பொருளாதாரத் தடை தளர்வு பற்றிய அறிவிப்புக்கு மேலதிகமாகத் தமிழர் பக்கத்துக்கு - புலிகளுக்குச் சார்பாக - அதிக விட்டுக்கொடுப்புகளுக்கு இடங்கொடுக்கும் அறிவிப்பை எடுத்த எடுப்பிலேயே - ஆரம்பத்திலேயே - ரணிலின் அரசு விடுக்குமானால், பெரும்பான்மைச் சிங்களவர் தரப்பில் இருந்து அரசு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கக்கூடும் என்பது ஏற்கக்கூடியதே.

அத்தோடு தனது பொருளாதாரத் தடைத் தளர்வு பற்றிய அறிவிப்புக்கு, தனக்கு எதிர்த்தரப்பிலிருக்கும், முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவையும் பிரதமர் ரணில் பெற்றாகவேண்டும்.

இந்தக் காரணங்களுக்காகப் பொருளாதாரத் தடைத்தளர்வில் சில கட்டுப்பாடுகளை - மட்டுப்படுத்தல்களை - அரசுத்தரப்பு இணைத்திருப்பதை ஓரளவு ஏற்றுக்கொள்ளப் புலிகள் தயாராக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

என்றாலும் இந்தக் கட்டுப்பாடுகளை - மட்டுப்படுத்தல்களை - அரசு எப்படிக் கையாளப்போகின்றது, கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களை எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்குவதில் எத்தகைய தாராளப்போக்கை - விட்டுக்கொடுப்பை - அரசுத் தரப்பு மேற்கொள்ளப்போகின்றது என்பவை குறித்தெல்லாம் திட்டவட்டமான தகவல்களை நோர்வே ஊடாக அரசுத் தரப்பிடமிருந்து புலிகள் எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது.

சிங்கள மக்களையும், இராணுவத்தையும், ஜனாதிபதியையும் சமாளித்து, சமாதானப் பேச்சை உடைய விடாமல் முன்னெடுக்கும் நோக்கத்துடன்தான் பொருளாதாரத் தடையைத் தளர்த்தும் விடயத்தில் சில கட்டுப்பாடுகளை ரணிலின் அரசு விதித்திருக்கின்றது என்பது உண்மையானால் -

இதுவிடயத்தில் தான் எதிர்காலத்தில் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் எப்படி அமையும் என்பதுபற்றிய முழுத் தகவலையும் உரிய உறுதி மொழிகளோடு, அரசு நோர்வே மூலம் புலிகளுக்குத் தெரிவிப்பதே சமாதான முயற்சிகளை சுமுகமாக முன்னெடுக்க உதவும் நடவடிக்கையாக இருக்கும்.

# புதிய அரசுடன் ஒத்துழைக்க தயார் என்கிறார் ஜனாதிபதி

## மகாநாயக்கருக்கு அவர் கடிதம்

கொழும்பு,ஜன.6

'புதிய அரசு மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான அனைத்து முன்னேற்ற முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்கத் தயாராக உள்ளேன்.'

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு மட்டிக பண்ணசீக மகாநாயக்கதேரருக்கு உறுதியளித்தார்.

நாடு எதிர்நோக்கும் சவால்களைச் சமாளித்து, சுபீட்சமான வருங்காலத்தை உருவாக்கும் வகையில் தேசிய ஒருமைப்பாடுடைய அரசை அமைக்க உதவுமாறு கோரி முன்னதாக ஜனாதிபதிக்கு மகாநாயக்க தேரர் கடிதமொன்றை எழுதியிருந்தார்.

அதற்கு அனுப்பிய பதில் கடிதத்திலேயே அரசுடன் ஒத்துழைக்கத் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

1994ஆம் ஆண்டு தான் பதவிக்கு வந்தபோது இத்தகைய வேண்டுகோளை ஐ.தே.க. தலைவருக்கு மகாநாயக்கர் விடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்குமென்றும் -

அப்போது இப்படியான வேண்டுகோள் விடப்பட்டு, அதற்கு எதிர்க்கட்சியினர் சம்மதித்திருந்தால் முக்கியமான பல பிரச்சினைகளைத் தீர்க்க தன்னால் முடிந்திருக்கும் என்றும் -

கடிதத்தில் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒத்துழைப்பு தேவைப்படும் விடயங்கள் குறித்து புதிய அரசு பட்டியலைச் சமர்ப்பித்தால் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கி பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரத் தானும், பொ.ஐ.முன்னணியும் தயார் என்றும் ஜனாதிபதி தேரரிடம் தெரிவித்துள்ளார். (ஒ)

### அரச தரப்பு நியமனங்கள்

நாடாளுமன்ற சபை முதல்வராக நீதி, நீதிச்சீர்திருத்த, இன ஒருங்கிணைப்பு அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கக் கட்சியின் பிரதம அமைப்பாளராக தொழில், தொழில் வாய்ப்பு அமைச்சர் மஹிந்த சமரசிங்க நியமிக்கப்பட்டிருக்கிறார். இதற்கிடையே, ஐ.தே.கட்சியின் தவிசாளராக மரிக் சமரவிக்கிரமவை நியமிக்க கட்சியின் நிர்வாகசபை தீர்மானித்துள்ளது. (ஐ)

## நாட்டு நடப்பு

### அன்றும் இன்றும்

காலையில் எழுந்து நீராடி
கடிமனை கூட்டிப் பின்னே
சாலையில் நீரினைத் தெளித்து
சரிவர முத்தமும் கூட்டி
சோலையில் பூக்களை ஆய்ந்து
சொக்கனைத் துதித்து நிற்பர்
மாலையில் மனையினில் கூடி
மகிழ்ந்து பஜனை செய்து
பாலரை ஒன்று கூட்டி
பக்குவமாய்க் கதைகள் சொல்லி
சீலமாய் எமை வாழவைத்த
சிறப்பெலாம் பெற்றோரைச் சேரும்.

படங்களை அனுதினம் பார்த்து
பலவகை அடிபிடி கற்று
நடையுடை பாவனை தன்னை
நலம்பெற அது போலாக்கி
இடையிடை மதுவகை குடித்து
இழுத்துச் சிகரட்டை ஊதி
தடையின்றி மனைவியைத் தாக்கி
தரங்கெட்ட வார்த்தைகள் பேச
விடைபெற்று மனையாளும் சென்று
விவாக இரத்தினை கோருகிறாளே!

- விகடகவி.

# யாழ்.மீனவ சமூகத்துக்கு உதவ இன்னமும் உருப்படியான நடவடிக்கை ஏதும் இல்லை

## விசனம் தெரிவிக்கின்றது கடற்றொழில் சமாசம்

யாழ்ப்பாணம்,ஜன.6

குடாநாட்டின் மீனவ சமுதாயத்திற்கு உதவுவதற்கு இதுவரை எந்தவோர் அமைச்சோ அல்லது பொது நிறுவனங்களோ முன்வராமை அவர்களிடையே பெரும் கவலையையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சமாசம் எத்தனையோ இடர்ப்பாடுகள் மத்தியில் செயற்பட்டு வருகின்றது. போதிய நிதி இல்லாத காரணத்தினால் எமது சேவையை மீனவ சமுதாயத்திற்கு வினைத்திறனுடன் வழங்க முடியவில்லை. இது தொடர்பாக நாம் பல சந்தர்ப்பங்களிலும் பலரிடமும் முறையிட்டிருந்தோம். எனினும் எந்தப் பலனும் ஏற்படவில்லை.

எம்மிடம் போதிய மூலதனம் இருக்குமாயின் யாழ்.மாவட்டத்தின் வருமானத்தில் அரைப் பங்கிற்கும் அதிகமானவற்றை எங்களால் பெற்றுக் கொடுக்க முடியும்.

எமது சமாசத்தின் பனிக் கட்டி உற்பத்தி நிலையங்கள் இரண்டும் முறையே நாள் ஒன்றிற்கு ஐந்து தொன, பத்து தொன் உற்பத்தி திறனை கொண்டவை. போர்க்காலச் சூழலில் இவை அழிக்கப்பட்டுவிட்டன. அத்துடன் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 40 லட்சம் சங்குகள் சேதமாக்கப்பட்டன. இவற்றிற்கெல்லாம் இதுவரையில் யாரும் எமக்கு நஷ்டஈடு வழங்கவில்லை. எம்மிடம் உள்ள சிறிதளவு நிதியைக் கொண்டாவது முதலாம் குறுக்கு வீதியில் உள்ள எமது பனிக்கட்டி உற்பத்தி நிலையத்தை செயற்படச் செய்வதற்கு முயற்சி எடுத்தபோது அதற்குக் கூட இராணுவம் தடை விதித்தது.

இது தவிர மண்டைதீவில் அமைந்திருந்த 'மீன்தூள் ஆலை'யும் சேதமாக்கப்பட்டுள்ளது. எமது கடலுணவுகளை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட இரண்டு வாகனங்கள் கூட மிக மோசமாகச் சேதமாக்கப்பட்டுள்ளன.

எமது சமாசத்திற்கு நிதி உதவி செய்ய எவராவது முன்வந்தால் அதனால் மீனவ சமுதாயம் புத்தெழுச்சி பெறும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-9)

# சு.கவுக்குத் தாவத் துடிக்கும் சிஹல உறுமயத் தலைவர்கள்

கொழும்பு,ஜன.6

'சிஹல உறுமய' கட்சியைச் சேர்ந்த பல முக்கிய தலைவர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். சுதந்திரக் கட்சியில் இணைந்து, பதவிகளைப் பெற்றுக் கொள்ள அவர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர் - என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'சிஹல உறுமய' கட்சியின் முன்னாள் எம்.பியான சம்பிக்க ரணவக்க, சுதந்திரக் கட்சியின் புலத்சிங்கள தொகுதி அமைப்பாளராகவும், சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரத்ன, களுத்துறைத் தொகுதி அமைப்பாளராகவும் பதவி வகிக்கத் தயாராக இருக்கிறனர் என்று அறியப்படுகிறது.

இது தொடர்பாக சு.க. தலைவர்கள் சிலர் சம்பிக்கவுடனும், திலக்குடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

கடந்த தேர்தலின்போது, 'சிஹல உறுமய' எதிர்பாராத வகையில் தோல்வியைத் தழுவிக் கொண்டதே இந்தக் கட்சித் தாவல் முயற்சிக்கான காரணம் எனத் தெரிகிறது. (ஐ)



பிரபல வானொலி நாடக எழுத்தாளர் பொ. சிவபாலனின் 'நாளை நல்ல நாள்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்..இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றுள்ளது. அங்கு மேடையேற்றப்பட்ட அவரது 'கோலங்கள்' நாடகத்தில் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம். (ஐ-10)

# புதிய நியமனங்கள் செய்ய திறைசேரி தடை விதித்தது!

கொழும்பு,ஜன.6

அரசின் அறிவிப்புக் கிடைக்கும் வரை சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகளில் புதிதாகப் பதவி நியமனங்களுக்கான ஆள்சேர்ப்புச் செய்ய வேண்டாமென்று திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்தை சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

அமைய, தற்காலிக அடிப்படையிலும் எவரையும் நியமனம் செய்யக் கூடாது. அவசரத் தேவையின் பொருட்டுச் செய்யப்படும் முக்கிய பதவிக்கு ஆள்சேர்க்கும் போது திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டும்.

இதேவேளை -

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மீது 'கிறடிட் கார்ட்' மோசடி சம்பந்தமான விசாரணையை ஆணைக்குழு ஆரம்பிக்கப்போகிறது.

அமைச்சர் திசநாயக்கா மீது மேற்கொள்ளப்பட்டு வந்த லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை முடிவடைந்துவிட்டதாகவும் ஆணைக்குழு இனிமேல் எதுவித நடவடிக்கையும் எடுக்காது என்றும் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது(ஐ)

### வனபரிபாலன அதிகாரி கைதானார்!

புத்தளம்,ஜன.6

புத்தளம் வனபரிபாலனத்துறை அதிகாரி ஏ.ஜயசிங்ஹா நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார். இவர் 25 ஆயிரம் ரூபா பணத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொள்ள முயன்றார் என்று கூறப்படுகிறது. கொழும்பிலிருந்து வந்த விசேட லஞ்ச அதிகாரிகளே அவரைக் கைதுசெய்தனர்.

புத்தளம் மாவட்ட மேலதிக நீதிவான் ஏ.ஏகநாதன் முன் அவர் ஆஜர் செய்யப்பட்டார். எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். (ஐ)

### பட்டதாரிகள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை -

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் ஆள் சேர்ப்புக்கு விண்ணப்பித்தும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதோர் தமது பெயர் விபரங்களை சங்க அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

### உதயவாக்கு

விமர்சிப்பதில் கவனமாக இருங்கள். உங்கள் நண்பனின் தோளில் உள்ள தூசைத் தட்டி விரட்ட கோடரியை வீசிவிடாதீர்கள்.

### நாளை

மார்கழி 23
திங்கட்கிழமை
(07-01-2002)
திதி : நவமி
முன்னிரவு 10.46 வரை.
நட்சத்திரம்: சித்திரை
பிற்பகல் 2.52 வரை.
சுபநேரம் : 12.31 - 2.01
ராகுகாலம் : 8.01 - 9.31
(பழைய நேரப்படி)

## திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடனும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்.... ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No.89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo-13.
T.P.No.01 433182, 472582.

(95982)


## மணிக்குரல் மணிவதனன் ஜெயச்சித்திரா ஞாபகார்த்தம் 7ஆம் ஆண்டு

கரம் ஒற்றையர், இரட்டையர் ஆட்டம் ஓப்பின்ஸ்
ஆண், பெண் இருபாலாருக்கும் கலைப்போட்டிகள்!

☆ பாட்டுக்குப் பாட்டு ☆ தேன்இசை மழை ☆ டிஸ்கோ டான்ஸ்

இம்முறை ஆர்வமுள்ள டிஸ்கோ நடனக்கலைஞர்களுக்குள் போட்டி வைத்து சிறந்த கலைஞர்களைத் தெரிவுசெய்து சிறந்த பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் கடிமூலம் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**மணி வீடியோ V.S.சற்குணன்**
52, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15-01-2002


*விளம்பர அனுசரணை:*

அஜந்தாஸ் புடவை மாளிகை
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P. 2899.

(C/19034)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1920 - 02 - 14

மறைவு 2001 - 12 - 07

### தினகரிப்பிள்ளை குமாரசாமி

*(மீசாலை வடக்கு, மீசாலை)*

எமக்கு உற்ற துணையாகவிருந்து
கல்வியூட்டி, நல்வாழ்வு வாழவைத்த
எமது அன்புத் தெய்வமே! இடப்பெயர்வு
காரணமாக உளம் நொந்து நோயுற்ற
போதும் உங்களைச் சுகமாக்கப் பாடுபட்டோம்.
காலன் கவர்ந்து கொண்டான். மாதமொன்று
சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு
என்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டி நிற்போம்.

தற்காலிக முகவரி:
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(96702)

*பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 - 08 - 1971

உதிர்வு 18 - 12 - 2000

### திருமதி வித்யா குகன்

*வித்யா விண்ணின் விடிவெள்ளியே வித்தகியே*
*சித்தம் அழகியாய் சிரனைத்தும் உடையவளே*
*முத்தின் முறுவலொடு முகங்காட்டும் இனியவளே!*
*தித்திக்கும் மொழியாளே தீராத அன்புடையாய்*
*சொத்தான மழலைகளின் சொர்க்மாய் நின்றவளே!*
*வித்தின்றி விளைந்த விழியழகே பேரின்பமே*
*எத்தினமும் உன்நினைவால் ஏங்கவைத்துச் சென்றாயே!*
*எத்திசையால் சென்றாய் ஏன்சென்றாய் சொல்லம்மா?*
*எத்தனை ஆண்டுகள் தான் ஏகிலும் மறப்போமோ!*
*நித்தம் வருகின்ற காற்றோடு நீ வருவாய்*
*அத்தினமே எம்கவலை அகல்கின்ற நாளாகும்.*

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

(96695)

உன் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்.

## சேவை நலன் பாராட்டு விழா

சண்டிலிப்பாய்,ஜன.6

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்தில் சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதனுக்கு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் சேவை நலன் பாராட்டு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். (ஐ-135)

## பாடசாலை சொந்த இடத்தில் இயங்கும்

தென்மராட்சி,ஜன.6

இடம்பெயர்வின் பின்னர் குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இயங்கி வந்த கரம்பை அ.த.க. பாடசாலை மீண்டும் இன்று தொடக்கம் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

வடமராட்சியில் தற்காலிகமாக இயங்கிய குடமியன் அ.த.க.பாடசாலை கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் சொந்த இடத்தில் இயங்கியதையடுத்து கரம்பை பாடசாலையும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-117)

## தற்காலிக வேலை நீக்கம்

சண்டிலிப்பாய்,ஜன.6

மண்எண்ணெய் விநியோகத்தில் முறைகேடு மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டி சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்றின முகாமையாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இக்கிளையில் பாவனையாளருக்கான மண்எண்ணெய் விநியோகத்தில முறைகேடு நடந்ததாகக் கிடைக்கப்பெற்ற புகாரை அடுத்து விசாரணை மேற்கொண்ட சங்க நிர்வாகம் இந்த முகாமையாளரை தற்காலிகமாக பணிநீக்கம் செய்துள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## இசையரங்கில் இன்று

வலி.வடக்கு,ஜன.6

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ஆலயத்தில் இடம்பெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் 5ஆம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மங்கள விளக்கை யாழ்.பல்கலைக் கலைப்பீடாதிபதி பிரம்ம ஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணசர்மா ஏற்றி வைப்பார்.

யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் செல்வி சிவகௌரி செல்வநாயகத்தின் பாட்டுக கச்சேரி இடம்பெறும். (ஐ-86)

## மின் இணைப்பு

சண்டிலிப்பாய்,ஜன.6

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு விரைவில் மின் கிடைக்கவுள்ளது. சங்கக் கட்டிடத்திற்கு மின் இணைப்பு (வயறிங்) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் மின் விநியோகம் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## ஆஸ்பத்திரிக்கு மின்வசதி இல்லை

சண்டிலிப்பாய்,ஜன.6

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

விரைவில் மின் விநியோகம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் வைத்தியசாலையில் மின் இணைப்பு வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு வருட காலமாகியும் இதுவரை மின் வழங்கப்படவில்லை. (ஐ-135)

## கோப்பாயில் புகையிலைச் செய்கை

யாழ்ப்பாணம்,ஜன.6

கோப்பாய், நீர்வேலிப் பகுதியில் விவசாயிகள் புகையிலைச் செய்கையை மேற்கொள்வதில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

புகையிலைச் செய்கையை மேற்கொள்ளும் ஆரம்ப நடவடிக்கையாக விவசாயிகள் தமது தோட்டங்களை உழுது பண்படுத்தி வருகின்றனர். (ஐ-17)

## இன்று பாராட்டு விழா



### உயர்திரு.செ.கு.சண்முகநாதன்

*(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)*

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த காலத்தில், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவியேற்று கூட்டுறவு அமைப்புக்களைப புனரமைத்து, புத்துயிர் கொடுத்து, கூட்டுறவு அமைப்புகளுக்கென ஒரு வங்கியை அமைத்து, கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலையை மேம்படுத்தியமைக்காகவும், கூட்டுறவுப் பணியாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியமைக்காகவும் அன்னாரின் சேவையைப் பாராட்டி இடமாற்றம் பெற்றுச்செல்லும் அவரை வாழ்த்தி இன்று (06-01-2002) ஞாயிற்றுக்கிழமை எமது சங்கத் தலைமையகத்தில் பாராட்டு விழாவை நடத்திச் சிறப்பிக்கின்றோம்.

பணிப்பாளரும், பணியாளரும்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்.

(C/19029)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மனிதனாய் 1947 - 09 - 01

அமரராய் 2001 - 12 - 07

அமரர்

### வல்லிபுரம் சிவராசா (V.S.)

*(உரிமையாளர், கிருபா சவுண்ட்)*

*பிரியமான எமது அப்பாவே! காலன் செய்த கோலத்தால்*
*நாம் கண்ணீரில் வாழுகின்றோம்! ஆத்மா சாந்தி அடைவதாக!*

எம் குடும்பத் தலைவரது பிரிவுச் செய்திகேட்டு பல வழிகளிலும் உதவிநின்று ஆறுதல் கூறிய அனைவருக்கும் நாம் நன்றி கூறுவதுடன், இன்று(06-01-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் குச்சம் ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக கிரியைகளிலும் தொடர்ந்து எமது வீட்டில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நக்கீரன் வீதி,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*

- குடும்பத்தினர்.

(96653)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### ஸ்ரீ சரவணமுத்து இரத்தினம்

*(இணுவில் - மஞ்சத்தடி)*

நல்லினுவை மஞ்சத்தடி முருகன் பாதம்
நாளுமே துதித்திடவே கோயில் வாசல்
மெல்லிய மலர்கள் தூவித் திருப்புகழை
மேவி புல் லரித்திடவே பாடிப் போற்றும்
வல்லவனாம் இரத்தினமும் வாழ்வை நீத்து
வளமார்ந்த சிவபதத்தில் சேர் ஓராண்டு
தொல்லுலகில் கடந்ததுவே அவர் நினைவால்
துடிக்குதே எம் நெஞ்சம் இனிக் காண்போமோ?

*- பிரிவால் துயருறும்:*
இ.மகேஸ்வரி *(மனைவி)*,
மக்கள்: இ.ஸ்ரீதரன் *(ஜேர்மனி)*,
இ.சிவகுமார் *(கனடா)*,
திருமதி பாலகிருஷ்ணன் சந்திரவதனி.

*மஞ்சத்தடி,*
*இணுவில்.*

(96689)

# சீர்திருத்தக் கொள்கையை அரசு விரைவுபடுத்த வேண்டும்!

## நாணயசபை அதிகாரி வற்புறுத்துகிறார்

கொழும்பு,ஜன.6

இலங்கையின் புதிய அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்களால் தான் உற்சாகம் அடைந்திருப்பதாக சர்வதேச நாணயசபை நேற்றுமுன்தினம் தெரிவித்தது. அதேவேளை, அரசின் சீர்திருத்தக்கொள்கையை விரைவுபடுத்தும்படி அது கேட்டுள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நடைமுறைக்கு வந்ததும் பிற்போடப்பட்ட கடன் வசதியை வழங்க சர்வதேச நாணயசபை தயாராகவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாணயசபையின் சிரேஷ்ட இலங்கை வதிவிடப்பிரதிநிதி நதீம் ஹுல்அக், ரோய்ட்டருக்கு அளித்த பேட்டியொன்றில் இவற்றைத் தெரிவித்துள்ளார்.

இனப்போரை முடிவுக்குக் கொண்டுவரப் பேச்சுக்களில் ஈடுபடும் அரசின் நடவடிக்கை உற்சாகமளிக்கிறது என்றும் அவர் கூறினார்.

பொருளாதார நிகழ்ச்சி நிரல் ஒன்றை அரசு கொண்டிருப்பது சாதகமானதோர் அறிகுறி. பொருளாதார சீர்திருத்த அமைச்சர் ஒருவரை நியமித்திருப்பதும் ஒரு நல்ல விடயமாகும்.

சீர்திருத்தத் திட்டத்தை அரசு விரைவுபடுத்த உற்சாகம் ஊட்டுவதையே நாமும் செய்வோம். அரசாங்கத்துறையினளவே பொருளாதார நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தும் ஓரம்சமாகும்.

அரசாங்கத்துறையின் திறமை மிகவும் குறைந்ததாகும். பொருந்தொகையான அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் நஷ்டத்தில் உள்ளன.

- இவ்வாறு அவர் பேட்டியில் கூறியுள்ளார். (ஐ)

## தேர்தல் வன்முறை குறித்து ஒன்பதாம் திகதி விவாதம்

### நாடாளுமன்றத்தில் நடக்கும்

கொழும்பு,ஜன.6

தேர்தல் தொடர்பான வன்முறைகள குறித்த விசேட விவாதம் ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற சபாநாயகர் ஜோசப மைக்கேல் பெரேராவுடன் அரசியற் கட்சித் தலைவர்கள் நடத்திய சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் ரத்னசிறி விக்கிரமநாயக்க விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்த விவாதம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

தேர்தலை அடுத்து ஆட்சியை இழந்த பொ.ஐ.முன்னணியின் ஆதரவாளர்களுக்கு ஐ.தே.கவினர் தொல்லைகளை விளைவிப்பதாக பொ.ஐ.முன்னணியினரும் -

தேர்தலுக்குப் பின்னர் பாரியளவிலான வன்முறைகளை பொ.ஐ. முன்னணி தூண்டிவிடுவதாக ஐதே.கவினரும் - மாறிமாறிக் குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி. தனித்தே போட்டி

### அக்கட்சியின் பிரசார செயலர் அறிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் நாடு முழுவதும் ஜே.வி.பி. தனித்தே போட்டியிடும் என்று அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ அறிவித்துள்ளார்.

இத்தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் அனைத்தும் பூர்த்தியாகிவிட்டன என்றும் - ஒவ்வொரு மாவட்டங்களுக்குமான வேட்பாளர் பட்டியல்கள் தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும் - அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் இணைந்து 'கை' சின்னத்தில் போட்டியிடும் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (க-4-ரி)

### மாணவருக்கு அன்பளிப்பு

அரியாலை,ஜன.6

புத்தாண்டு தினத்தன்று கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

ஆலய மண்டபத்தில் வைத்து மாணவர்களுக்கு பரிபாலன சபைத் தலைவர் க.செந்தில்குமரன் இந்த அன்பளிப்புப் பொருள்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஆலய இந்து இளைஞர் மன்றத் தலைவர் வ.பிரதாப் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ஐ-17)

### வருடாந்த ஒன்றுகூடல்

சண்டிலிப்பாய்,ஜன.6

சண்டிலிப்பாய்(வலி.தென்மேற்கு) பிரதேச செயலகப் பணிமனையின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவமும், மதியபோசன விருந்தும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கலந்து கொள்வார். (ஐ-135-100)

★ ★ ★

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று காலை 10 மணிக்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் செயலக விருந்தினர் மண்டபத்தில் இடம்பெறும்.(ஐ-7-100)



காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் சுமார் 12 வருடங்களுக்கு பின்னர் கடந்த புதன்கிழமை தொடக்கம் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. பாடசாலையை மீள ஆரம்பித்து வைப்பதற்காக வருகைதந்திருந்த இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன், காரைநகர் மணக்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

அமைச்சர் தி.மகேஸ்வரன், ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.இரத்தினசிங்கம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விகனேஸ்வரன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் பாடசாலை முன்றிலில் வரவேற்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படம்:-காரைநகர் செய்தியாளர்)*

## ஆயிரத்து 279 பட்டதாரிகளுக்கும் மூன்று நிலையங்களில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ள பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் ஆள் சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை தொடர்பான பூரண விவரங்கள் யாழ். மாவட்ட மேலதிக மாகாணக கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை நல்லூர், முத்திரைச்சந்திக்கு அருகில் உள்ள மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை, யாழ்கல்வி வலய அலுவலகம், யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபம் என மூன்று நிலையங்களில் 8 ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் நடைபெறவுள்ளது.

அழைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 279 பேரும் தமது அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கத்தின்படி குறிப்பிட்ட திகதியில் உரிய நிலையத்தில் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் தோற்றவுள்ளோர் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பட்டச் சான்றிதழ (பாட விவரங்களுடன்), கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவற்றின் மூலப்பிரதிகளையும் அவற்றின் போட்டோப் பிரதிகளையும் தம்முடன் எடுத்துவருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு குழுத் தலைவர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா ஆகியோர் கடமையாற்றவுள்ளனர்.

நேர்முகப் பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(ஐ-10-8)

### நேர்முகப் பரீட்சை

நவாலி,ஜன.6

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள இவ்வாண்டுக்கான தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்கவேண்டுமென பிரதேச செயலர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (ஐ-7-100)

## அழகியற் சுவையும், விமர்சனப் பாங்கும் அடங்கிய வானொலி நாடகக் கலைவடிவம்

தொழில்நுட்ப வளர்ச்சி காலத்திற்குக் காலம் புதிய புதிய கலைவடிவங்களை அறிமுகப்படுத்திக்




கொண்டே போகிறது. கலைஞனின் ஆற்றலிற்கும், கற்பனைத் திறனிற்குமேற்ப இப்புதிய கலை வடிவங்களின் எல்லைகள் வியாபித்துக் கொண்டே போகிறது. திரைப்படங்களும், குறுந் திரைப்படங்களும் கட்புலனை முதன்மைப்படுத்துவன. 'உடல் மொழி' அங்கு முதன்மை பெறுகிறது. செவிப்புலன் இரண்டாம் பட்சமே.

ஆனால் வானொலியோ செவிப்புலச் சாதனம். அங்கு கட்புலனிற்கு இடமில்லை. இதனால் அதனூடாகத் தரப்படும் கலை வடிவங்களும் செவிப புலனிற்கேயுரியவை. நாடகமென்ற கட்புலச் சாதன வடிவமொன்று வானொலி வழியாக முற்றிலும் செவிப் புலன்வழி தரப்படும்பொழுது உரிய கலையனுபவத்தை சுவைஞர்க்குத் தர வல்லதோ என்பது எப்பொழுதும் விவாதத்திற்குரியது. 'நாளை நல்ல நாள்' இவ்விவாதத்தில் வெற்றி பெற்றுள்ளது. ஆற்றுகை, வாசிப்பு என்ற இரு தளங்களிற் செயற்பட்ட நாடகம், வானொலி நாடகமாகத் தரப்படும் பொழுது முற்றிலும் புதியதொரு கலை வடிவமாகிறது. இப்புதிய வடிவத்திற்கு சிவபாலனின் நாடகங்களும அணிசெய்கின்றன.

சிவபாலனின் 'நாளை நல்ல நாள்' என்ற இவ்வானொலி நாடகத் தொகுப்பு அச்சுருவில் வருகின்ற புதியதொரு இலக்கிய வகை. இவ்வகை இலக்கியம் தரும் கலையனுபவம் முற்றிலும புதிய வகையாதலினால் "நாளை நல்ல நாள்" அக்கறைக்குரியதாகிறது.

**நூல்: நாளை நல்ல நாள்**
**ஆசிரியர்: பா.சிவபாலன்**

மகாகவி குறும்பா முன்னோடி. அராலியூர் சுந்தரம்பிள்ளை நாடறிந்த வானொலி நாடக ஆசிரியர். இவ்விருவரதும் அடியொற்றி சிவபாலன் 'நகை' என்ற குறும்பாவை வெளியிட்ட கையுடன் 'நாளை நல்ல நாள்' என்ற இந்தத் தொகுப்பையும் தந்துள்ளார் என்பது ஆச்சிரியமடைய வைக்கிறது - ஆரவாரமற்ற சராசரி மனிதன் என்ற கணிப்பீட்டினுள் நகைச்சுவையுணர்வு மிக்க கலைஞனொருவன் இருப்பதை இப்படைப்புகள் அம்பலப்படுத்துகின்றன.

விமர்சன யதார்த்தவாதம் சிவபாலனின் கலை இலக்கியக் கோட்பாட்டுத் தளம். தான் வாழும் சமூகம பற்றிய முரண்பட்ட விழுமிய நிலைபாடுகளை நகைச்சுவையுணர்வுடன் சிவபாலன் விமர்சிக்கின்றார்.

வானொலி நாடகத்தின் இயல்புகள் பற்றிய நா.சுந்தரலிங்கத்தின் முன்னுரையுடன், சிவபாலனின் எட்டு நாடகங்கள் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆண் - பெண் உறவு தொடர்பான பிரச்சினையும், அதன் பின்னணியான தமிழ்ச் சமூகமுமே இந்த நாடகத் தொகுப்பின் அடி நாதமாக இருக்கிறது. எமது சமூக நடைமுறைகள் இந்தப் படைப்புகளில் கலைச்சுவையுணர்வுடன் விமர்சிக்கப்படுகிறது.

**பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா**
**தலைவர்,**
**மெய்யியற்றுறை,**
***யாழ்.பல்கலைக்கழகம்.***

இன்றைய நுகர்வுக் கலாசாரத்தில் கலை - இலக்கியங்கள் விற்பனைப் பண்டங்களாக மாறிவருகின்றன. ஒரு புறம் அழகியலடிப்படையில் 'கர்ண கடூரமான' விமரிசனத்திற்கு உள்ளானதாகவும், மறுபுறம் சந்தைப் பெறுமானத்தை இழந்த விற்பனைப் பண்டமாகவும் உள்ள "போதனை இலக்கிய மரபிற்குப்" பதிலாக அழகியற்

### நூல்விரிசை

சுவையும், விமரிசன அணுகுமுறையும் கொண்ட நண்பர் சிவபாலனின் பார்வை அவரது நாடகத் தொகுப்பைக் கனதியுள்ளதாக்குகிறது. அது எதனையும், எவர்க்கும் போதிக்க முயலும் பிரச்சினையின்பால் சுவைஞனின் கவனத்தை ஈர்க்கிறது. தற்காலக் கலை - இலக்கியங்களின் பண்பும் அதுவே. ☆

## மட்டு.,வன்னியில் வாக்களிக்க அனுமதி மறுப்பு: மேன்முறையீட்டு நீதிமன்றில் எட்டு மனுக்கள் தாக்கல்

கொழும்பு,ஜன.6

கடந்த தேர்தலில் வன்னி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதி மறுக்கப்பட்டமைக்கு எதிராக எட்டு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

படையினர் மக்களின் வாக்குரிமையைத் தடைசெய்ததன் மூலம் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று அந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுக்களை அந்த மாவட்டங்களைச் சேர்ந்த எட்டு வாக்காளர்கள் தாக்கல் செய்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.இரவிராஜ் ஆகியோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்



உயர்திரு.

## ஈ. எஸ்.விஜயராசசிங்கம் ஜே.பி.

*(ஓய்வுபெற்ற கணித முதன்மை ஆசிரியர், மல்லாகம்)*

தெல்லிப்பழை, வர்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப பிடமாகக் கொண்டவரும், யாழ்.மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் கௌரவ பொருளாளரும், வடமாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தின் கௌரவ உப பொருளாளரும்; மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் கோயில் புனருத்தாரண சபையின் கௌரவ உப தலைவரும்; இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், வலி.வடக்குப் பிரிவின் தலைவரும், சமயத் தொண்டரும், சமூகசேவையாளரும்; மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இருந்து இளைப்பாறிய மூத்த கணித ஆசிரியரும், பாடசாலை பிரிவுத் தலைவருமான,

**உயர்திரு.ஈ.எஸ்.விஜயராசசிங்கம்**

அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரை ஒருங்கிணைந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்.மாவட்ட - அரச ஓய்வூதியர் சங்க
நிறைவேற்றுக் குழுவினர் மற்றும் உறுப்பினர்கள்,
வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்க பணியாளர்கள்,
வடமாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தினர்,
மல்லாகம் மகாவித்தியாலய சமூகத்தினர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வலி.வடக்குப் பிரிவு மற்றும் நண்பர்கள். (96743)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராமச்சந்திரன்

மானிப்பாய் இந்துக் கல்லூரியடியைச் சேர்ந்த கந்தையா இராமச் சந்திரன் 28.12.2001 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்புமகனும் காலஞ்சென்ற சின்னத்துரை - சொர்ணம்மா தம்பதியினரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் கோமதி (ஜேர்மனி), சுயமதி (ஜேர்மனி), பாமதி, ரஷிக்கா, வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நித்தியலிங்கம் (ஜேர்மனி), ஸ்ரீதர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிலாஷ் (ஜேர்மனி), ஜெனிஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி பொன்னுத்துரை - அன்னலக்ஷ்மி, திருமதி தியாகராஜா - நாகேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு, திருமதி செல்லையா - பாக்கியலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2002) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*சாளிகோயிலடி,*
*மானிப்பாய்.* (C/0004)

தகவல்:
இ.புவனேஸ்வரி
(மனைவி)

## திருமதி தம்பிராசா தையலம்மா

**(செல்லம்)**

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு தம்பசிட்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா தையலம்மா 04.01.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும் நித்தியானந்தராசா (கனடா), மாலினிதேவி (பிரான்ஸ்), சதானந்தராசா (பிரான்ஸ்), ஜெயந்தினி தேவி (கிளிநொச்சி), சுகானந்தராசா (பிரான்ஸ்), சித்திராதேவி (உரும்பிராய்) ஆகியோரின் அருமைத் தாயாரும் ரஞ்சனமாலா (கனடா), தேவராசா (பிரான்ஸ்), வசந்தா (பிரான்ஸ்), சந்திரன் (கிளிநொச்சி), அருளானந்தம் (மதி - உரும்பிராய்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கணபதி நிறுவனம்,*
*பலாலி வீதி,*
*உரும்பிராய்.* (96740)

தகவல்:-
T.தம்பிராசா *(கணவர்)*
அருளானந்தம் *(மதி)*
*(மருமகன்)*

## இராசரத்தினம் மகேந்திரராசா

**(வல்வெட்டி)**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் மகேந்திரராசா 04.01.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:-
மகேந்திரராசா - மீனலோஜினி *(மகள்)*
*வல்வெட்டி.* (96734) (எக்ஸ்றே ஒப்பரேற்றர் - மந்திகை)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கணனி விற்பனைக்கு

பென்டியம் கணனி மற்றும் HP. 1100 லேசர் பிறின்டர் முதலியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.51, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். (96708)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் (1Kg 140/=), கல்பேட் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம் மற்றும் 2 மாதம் நிரம்பிய சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S.கண்ணா, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (96691)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (96618)

## புறோயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

Prima இன புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச சந்தி, T.P.No.3529,2867. (96729)

பிறிமா இனச் சிவப்பு, வெள்ளை நிறங்கொண்ட இரண்டு நாள்கள் நிரம்பிய பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.குணபாகன், இல.4, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
**T.P.3353** (96729)

## தேவை

தரம் 10, 11 ஆங்கிலம் தனிப்பட்ட முறையில் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. வந்தும் கற்கலாம். தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல.1431,மே/பா உதயன். (96755)

## தவறிவிட்டது

5ஆம் வட்டாரம், நெடுந்தீவைச் சேர்ந்த நடராசா துதிகரன் என்பவருடைய தே.அ.அ. (இல.781694436V), விசேட அ.அ. என்பன பண்ணைப் பகுதிக்கும் யாழ்.பஸ்நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.27,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (96716)

## ENGLISH CLASSES

O/L, A/L, G.A.Q., B.A. மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமான ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகின்றன. அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தொடர்பு:- K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (96688)

ஆண்டு 6 தொடக்கம் G.C.E. A/L 2003, 2004 வரை ஆங்கில வகுப்புகள் உடன் ஆரம்பமாகும். G.C.E. O/L மாணவர்களுக்கு ஆங்கில இலக்கிய வகுப்புகளும் Special English Course E.S.L. (G.A.Q.) வகுப்புகளும் நடைபெறும். தொடர்பு:- திரு.அரியரட்ணம், 16, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி. (96690)

**O/L Distinction, Credit** பெறுபேறடையவும் **A/L, G.A.Q.**, ஆண்டு 9,10, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். **B.Sc. (Cey.)** 85, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (96745)

## 2002 தைப்புத்தாண்டு பலாபலன்கள்

தைமாத இராகு கேது மாற்றங்கள் எங்கும் விற்பனையாகின்றன. கணிப்பாசிரியர் Prof.சத்தியநாலன் (சத்யா) (MECH.E. ELEC.E (Cey. & Lon.), தத்துவ ஞான ஜோதிட விஞ்ஞான நூலாசிரியர், 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. தொலைபேசி: 021-2753. (96750)

## பட்டப்பகலில் வீட்டாரை மிரட்டி தேங்காய் திருட்டு

பட்டப்பகலில் வீட்டாரை மிரட்டி விட்டு தென்னை மரத்தில் தேங்காய் பறிக்கும் சம்பவங்கள் நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. பாளை கத்தியை காட்டி "வந்தால் கழுத்து சீவப்படும்" என அச்சுறுத்தி விட்டு தேங்காயத திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனராம். (ஒ-139)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக
நடனத்துறை விரிவுரையாளர்
**திருமதி**
**கிருஷாந்தி இரவீந்திரா**

அவர்கள் இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முதலாக பரதநாட்டியத்துறையில் "முதுதத்துவமாணி" பட்டம் பெற்றமையையிட்டு அவருக்கு எமது உள்ளம் மகிழ்ந்த நல்வாழ்த்துக்கள்.

"பரதக்கலை நூலாய்ந்து நாட்டி யத்தில்
பரதமே வியக்குவணம் அரங்க மேறி
கரதலத்தில் லயதாளம் ஏந்தி ஆடல்
கலை பயிற்றி யாழ்.பல்க லைக்க ழகம்
தரமுயர்த்தி நாட்டிய மணிகள் பல்லோர்
தரணியிலே கலைச்சேவை ஆற்ற வைத்த
கிருஷாந்தி ரவீந்திராவும் முதுக லையின்
தத்துவ மாணிபெற்றாள் நீடு வாழி!

(96728) திரு.சண்முகநாதன் குடும்பத்தினர்.


## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

### தொலை நிலைக் கல்வி இயக்கம்

**மாணவர் அனுமதி**

விண்ணப்ப முடிவு திகதி:
**31-01-2002**

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் வெளிவந்துவிட்டன. உங்களின் அடுத்த திட்டம் என்ன?



காலம் பொன்னானது அல்லவா!
இன்றே இப்பல்கலைக்கழகம் மூலம் ஒரு பட்டதாரி ஆகுங்கள்.
காலத்தின் தேவைக்கேற்ப பல்வேறு துறைசார்ந்த பட்டப்படிப்புக்கள், மேற்படிப்புக்கள், டிப்ளோமா போன்ற 40 பாடநெறிகள் உண்டு.
*2002 ஆம் ஆண்டுக்கான நேரடி அனுமதிகளுக்கும் மேலதிக விவரங்களுக்கும்:-*

**அம்பிகா உயர் கல்வி நிலையம்**

43, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13.
தொலைபேசி: 336722 தொலைநகல் 430030
Hotline 077-322034

யாழ்ப்பாணத்தில் தொடர்பு:
**திரு.ஜெகநாதன் தற்பரன்**
பட்டப்படிப்புக் கல்லூரி,
57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/29036) ★ சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்.


# நீங்காத நினைவில் ஆண்டு ஒன்று



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 | 20 |
| - | - |
| 06 | 12 |
| - | - |
| 1925 | 2000 |

அமரர்
**சுவாமிநாதக்குருக்கள் இராஜேந்திரக்குருக்கள்**
(பிரம்ம குரு)

திதி: அமரபக்க தசமி 08-01-2002 செவ்வாய்க்கிழமை

எங்களுக்கு எல்லாமாகி நின்று எம்மை
வாழவைத்த எமது அன்பு அப்பாவின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாளைமறுதினம் (08-01-2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

*கந்தசுவாமி தேவஸ்தானம்,*
*நீர்வேலி.* - குடும்பத்தினர். (96730)

| | | | |
|---|---|---|---|
| | | சனி | வியா. ராகு |
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| புத. | | | |
| வெ. கேது சூ. | | | சந். |

6.1.2002இல் அத்தம் - கன்னி ராசியில் சந்திரன் நிற்கும்.

6.1.2002இல் மீனராசியில் செவ்வாய் மாறும்.

**பேச்சு தொடரும். கட்சிகள் மாறலாம் கொள்கைகள் மாறாது என்ற பிடிப்பை ஒவ்வொருதரப்பினரும் கடைப்பிடிப்பர். யார் குற்றியும் அரிசி மாவாக வேண்டும் என மக்கள் சிந்திப்பர். இந்தியா காஷ்மீரில் கிழக்கு முனை நோக்கி நகர்வுகளைச் செயற்படுத்தத் திட்டமிடும். அமெரிக்கா புதிய திட்டங்களை மத்திய கிழக்கிலும், கிழக்கு நாடுகளிலும் பிரயோகம் செய்யும். பசுபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கை அழிவுகள் ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.**

# இந்த வருஷ இராசி பலன்

# 06.01.2002 ~ 12.01.2002

## மகாதேவா ஜோதிடம்

## மேடம்

படித்தவர்கள் எல்லோரும் நல்லவர்களும் அல்லர் படியாதவர்கள் எல்லோரும் கெட்டவர்களுமல்லர். தொழில் ஸ்தானத்தில் நல்லதும் நடக்கும் கெட்டதும் நடக்கும். சகோதரங்களுக்கு நன்மைகள் நடக்கும், காரியம் அனுகூலமாகும். பொருள் பிரச்சினை, குடும்ப வைத்தியச் செலவு குடும்பத்தினருக்காகப் போராட்டம், மேற்குத்திசையிலிருந்து நற்செய்திகள் என்பனவரும். பொருள் திடீரென மறைதல், சிலருக்கு இடமாற்றம், எதிர்ப்பாலாரின் உடல் நிலை பாதிப்பு, அதனால் அலைச்சல், மனப்பதற்ற நிலை மூலநோய், உஷ்ண பீடைகள் என்பன வரும். சட்டத்துறை, மருந்துத்துறை, அரச துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வியாழன், சனி.*

## இடபம்

போராடித்தான் எதையும் சாதிக்க முடியும். போராடித்தான் பார்ப்போம் என ஒருவர் நினைத்துவிட்டால் அவரை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. தொழில் ஸ்தானத்தில் வரவுகள் அதிகரிக்கும். சுபமங்கள காரியங்கள் நடக்கும். அதிக செலவுகள் விட்டுவிட்டு வரும். சத்தியவாக்கு, கோயில் காரியங்களில் ஈடுபாடு என்பன நடக்கும். அரச பயம், இனசன உதவிகள் கிடைக்கும். சல வருத்தம், நாரி நோ, கைகால் தாக்கங்கள் என்பன இருக்கும். நீதித்துறை, ஆசிரியத்துறை, மருந்துத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

## மிதுனம்

பூனை கண் மூடியபடி பால் குடிக்குமாம். இப்படியாகச் சிலர் தவறுகளைச் செய்துவிட்டு மூடி மறைக்கப்பார்த்து அகப்பட்டுவிடுகிறார்கள். கற்பு என்பது உடலில் மட்டுமல்ல. உள்ளத்திலும் இருப்பதை ஆண், பெண் என்ற பேதமற்று உணர வேண்டும். செயற்படவும் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிகள், வருமான அதிகரிப்பு, வாகனச் செலவு, வீட்டு வைத்தியச் செலவுகள் இருக்கும். எதிரிகள் வலிமை அடைந்து தொல்லைகளை தருவர். துயரச் சம்பவங்கள் நடக்கும். முதுகுவலி, களைப்பு, சலிப்பு, மலச்சிக்கல், அடிகாயங்கள் என்பன வர இடமுண்டு. போக்குவரத்துத்துறை, சங்கீதத்துறை, பாதுகாப்புத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

## கடகம்

பதவியில் ஏறுவது கஷ்டம். இறங்குவது பட்டென நடக்கின்றதை உலகம் பார்த்தபடி இருக்கின்றது. முறைகெட்டுப் பதவி, பந்தத்தால் ஏறுபவர்களை நிச்சயம் நீதி தேவதை இறக்கி விட்டுச் செல்லும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்படும். அவமானம் ஏற்படல். இனஜனம் பற்றிய சிந்தனைகள், எதிர்பாராத உதவிகள் அந்நியரிடமிருந்து கிடைத்தல், ஆடம்பரச் செலவுகள் என்பன இருக்கும். விவாதத்தால் காரியம் நடக்கும். சல வருத்தம், மனப்பயம், வயிற்று நோ, பிரசர் வரும். நீதித்துறை, பாதுகாப்புத்துறை, கோயில்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

## சிங்கம்

எதிர்பார்த்ததைவிட எதிர்பாராத எத்தனையோ அலுவல்கள் நடக்கின்றன. ஆட்சிப் பீடத்தை எட்டிப் பார்க்க விரும்பாதவர்கள் கூட பதவி தேடிவரும் பொழுது அதை ஏற்கவேண்டிய சூழ்நிலை வரலாம். தொழில் ஸ்தானத்தில் வருமானம் அதிகரிக்கும் வாகன சுகம், பொருள் வரவு, சகோதரங்களுக்கு நன்மைகள் ஏற்படல், அரச ஆதரவு, மேலதிகாரிகள் உதவி செய்தல், புதிய பொறுப்பு வரும் நிலை தோன்றும். அடிக்கடி கோபம், நாரி நோ, தொண்டை நோ, ஓய்வு இல்லாமல் சுகயீனம், சளித் தொல்லை என்பன வரும். மின்சாரம், இரசாயனம், மருந்து போன்ற துறையினர்களுக்கும் குருத்துறையினர்களுக்கும் நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், சனி.*

## கன்னி

அங்கும் இங்கும் அலைந்து தேடிய செல்வாக்கில் சிலர் சேறு பூசுவது எதற்காக எனச் சிந்திக்கிறீர்களா? குடும்பத்தில் நன்மைகள் நடக்கும். பொருள் வரவு, நண்பர்களின் உதவிகள் அதிகரித்தல், இடமாற்ற யோசனைகளைக் கைவிடவும். அபிப்பிராய பேதங்கள் வரலாம். கை, கால் விறைப்பு, இடுப்பு வலி, கிருமித்தாக்கம், இரத்த நோயகள் என்பனவரும். மருந்துத்துறை, சங்கீதத்துறை, செய்தித்துறை, கொமபியூட்டர்துறை போன்ற துறையினர்களுக்குப் பல நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்,வியாழன், சனி.*

## துலாம்

கோயிலுக்கு குறிபூசிச் செல்வதில் என்ன இருக்கின்றது? குறிபூசாத எத்தனையோ பக்திமான்கள் எம்மத்தியில் சக்திபெற்று இன்றும் இருக்கின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் வருமான அதிகரிப்பு நண்பர்களின் உதவிகள் கிடைத்தல் மறைமுக எதிரிகள் வலிமை அடைவார்கள். கீழ் மட்ட ஊழியர்கள் வீண்பழி சுமத்துவார்கள். வயிற்று நோ, சலப் பிரச்சினை, நாரி நோ, சளி வருத்தம் என்பன வரலாம். அரசியல்துறை, சட்டத்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன், சனி.*

## விருச்சிகம்

எதையும் போராடிப் பெறுவதில் ஒரு சுகம் இருக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் பதற்றநிலை தோன்ற இடமுண்டு. பொருள் நஷ்டம் வரும். தடுமாற்றம் ஏற்படும். பொதுத் தொண்டு, எதிர்ப்பாலாரால் பொருள் வரவு ஏற்படும். கிருமித் தாக்கம், மூக்கடைப்பு, நரம்பு வருத்தம், சல வருத்தம், பிறசர் வர இடமுண்டு. சட்டத்துறை, அரசியல்துறை, சந்தைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

## தனுசு

இறுதி வெற்றிவரும்வரை நல்லவர்கள் போராடியபடிதான் இருப்பார்கள். தோல்வி கிடைத்தாலும் அதுவும ஒருபடி அனுபவம்தான். மாமூலில் நடக்கும் விஷயம் பல உயர்வுகளைத் தடுத்து நிறுத்தாமல்விடாது. தொழில் ஸ்தானத்தில் செலவுகள் அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏறபடும். ஸ்தல யாத்திரைகள் ஏற்படும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். மேலதிகாரிகளால் நன்மைகள் ஏற்படும். புதிய திட்டம் வெற்றி அடையும். கை கால் உளைவு, வயிற்று வருத்தம், இரத்த நோய், மனப் பயம் என்பனவரும். மருந்து சட்டம், சந்தை வியாபாரம், வாகனம் போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு பல மாற்றங்கள் ஏற்படும். ஆசிரியத்துறையினருக்கு புதிய திட்டங்கள் வெற்றிதரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

## மகரம்

பாம்பும் ஏணியும் வாழ்க்கையில் சகஜம்தான். தொழில் ஸ்தானத்தில் பதற்றநிலை உருவாகும். தொழில் நிலை மாற்றம். அரச பயம், குடும்பத்தினருக்குப் பதற்ற நிலை என்பன ஏற்படும். எதிலும் ஒரு மந்த நிலை வரலாம். வருமானத்தில் குறைவு ஏற்படும். சட்டவிரோத செயற்பாடுகள், மனக்குழப்பம் இருக்கும். தோல் வருத்தம், மூட்டுவலி, பயம் என்பன வரும். குருத்துறை, வியாபாரத்துறை, நீதித்துறை, கோயில துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

## கும்பம்

ஊழல்கள் மலிந்த உலுத்தர்கள் உத்தமர்களாக உயர் பீடங்களை அலங்கரிக்கின்ற நிலை - கோயில்களின் நிர்வாக பீடத்தில் ஓடுகளைக் களவாகக் கழற்றும் உததம பக்தர்கள் நிறைந்த நாடுகள் என்றும் உருப்படுமா? இதை எண்ணுகிறீர்களா? தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் நடக்கும். பொதுத் தொண்டுகள், தானதர்மம், நண்பர்களின் உதவிகள், இனஜன வருகை என்பன நடக்கும். கால் வருத்தம், இருதயப் படபடப்பு, மறதி, சளி என பன கொடுக்கும். புத்திரரால் மகிழ்ச்சி வரும். இரும்புத்துறை, வரி, வங்கித்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

## மீனம்

பொதுத் தொண்டில் ஈடுபடுவார்கள சாதி, மதத்தை பெரிதாக மதிக்கக் கூடாது. அன்பு, பண்பு, அறநிலை ஓங்க உழைக்க வேண்டும். தொழில் ஸ்தானத்தில் பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்கள் உங்கள் செயற்பாட்டால் நடக்கும். பொருள் வரவுகள் இருக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் நடக்கும். வீடு மனைச் சிறப்பு திடீர் பிரயாணங்கள், வாகன சுகம், பொருள் வரவுகள் அதிகரிக்கும். செலவுகளும் விட்டுவிட்டு நடக்கும். கால்நோ, சளித்தொல்லை, மறதி, இரத்த நோய் என்பன வரும். மருந்துத்துறை, கடற்றுறை, பிரயாணத்துறை, சந்தைத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

## மக்கள் முகம்



யாழ்.பல்கலைக்கழக உயிரியற்றுறை விரிவுரையாளர் சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன் 2000 ஆண்டுக்கான அதியுயர் ஜனாதிபதி விஞ்ஞான விருதினைப் பெற்றுள்ளார்.


இவருக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விருதையும், பணப் பரிசிலையும் வழங்கினார்.

உயிரியல் விஞ்ஞானத் துறையில் நுளம்புகள் பற்றிய ஆய்வில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நுளம்பினம் ஒன்றை ஆராய்ச்சியின் மூலம் இவர் இலங்கையில் இனம் கண்டுள்ளார்.

இது தொடர்பான ஆய்வுக் கட்டுரை இலண்டனில் இருந்து வெளிவரும் "பிக்நெல்" ஸ்தாபன வெளியீடான விஞ்ஞான சஞ்சிகையில் (2000 ஓகஸ்ட்) "மருத்துவமும் விலங்கியலும்" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் பண்டத்தரிப்பு வடலியடைப்பைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரிய தம்பதிகளான திரு.திருமதி சு.சின்னத்தம்பியின் புதல்வராவார். விஞ்ஞான கலாநிதிக்கான பட்டப்படிப்பை தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் இவர் மேற்கொண்டு வருகின்றார். (ஐ-135-185)

* * *



நெடுந்தீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் விசுவநாதர் சுப்பிரமணியம் கொழும்பு மாவட்ட சமாதான நீதிவானாக அண்மையில் நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், ஆசிரியராகவும், பதில் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவராவார்.

இவர் விசுவநாதர் (முன்னாள் கிராமசபை உறுப்பினர், கிளிநொச்சி) தம்பதிகளின் புதல்வராவார். (ஐ)

* * *



யாழ். நாவாந்துறை றோ.க.வித்தியாலய அதிபரும், யாழ். மாவட்ட சாரண உதவி ஆணையாளரும் முன்னாள் யாழ். மத்தியகல்லூரியின் சாரணத் தலைவரும் ஆலோசகருமாகிய கவிரியேல்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை சாரணத்தலைவர்களுக்கான உயர்பயிற்சியினை சிறப்பாக நிறைவு செய்து சாரணிய தருசின்னத்தையும் (Wood Badge) அவத்தை V க்கான தகைமைச் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் பழைய மாணவரான இவர் கல்லூரியில் கல்விகற்கும் காலத்திலேயே சாரணத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். குருளைச்சாரணனாக, சிரேஷ்ட சாரணராக, திரிசாரணராக, சாரணத்தலைவராக இருந்து உதவி மாவட்ட ஆணையாளராகப் பல பொறுப்பான பதவிகளை இவர் வகித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு சாரணத் தலைவர்களுக்கான ஜனாதிபதி விருது பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து இவருக்கு வழங்கப்பட்டது. (ஐ-180)

* * *

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த சுமார் ஒன்றரை வருடங்களாக வெற்றிடமாக இருந்த பதிவாளர் பதவிக்கு திருமதி நாகேந்திரராணி தங்க ராஜா 2002.01.01ஆம் திகதி முதல் நிரந்தர பதிவாளராக யாழ்.பல்கலைக் கழக பேரவையால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சேவையை ஆரம்பித்த இவர் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உதவிப்பதிவாளர், சிரேஷ்ட உதவிப்பதிவாளர், பதில் பிரதிப் பதிவாளர், பதில் பதிவாளர் போன்ற பதவிகளை வகித்து இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் உள்வாரியாக நியமனம் பெற்ற முதல் தமிழ் பெண் பதிவாளர் ஆவார். பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யா/சேர் கனகசபை வித்தியாசாலை, யூனியன் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியும் ஆவார்.

## வன்னி சிறுவர்களுக்கு அன்பளிப்பு

வவுனியா,ஜன.6

வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கு புதுவருட அன்பளிப்புக்கள் கிடைக்கவிருக்கின்றன. இலங்கையில் உள்ள ஐ.நா. நட்புறவுக்கழகம் இந்த அன்பளிப்புக்களை வழங்கவிருக்கிறது.

எதிர்வரும் 19ஆம் திகதி இக்கழக உறுப்பினர்கள் கொழும்பில் இருந்து புறப்படுவர். இவர்களோடு 'பெய்யரல்' அமைப்பின் அமைப்பாளர் கிங்ஸிலி றொட்ரிகோ உட்பட உறுப்பினர்கள் சிலரும் வன்னி செல்லவுள்ளனர். காணாமற்போன படையினரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கத்தினரும் வன்னிக்குச் செல்ல ஏறபாடு செய்துவருகின்றனர். (ஐ)



**யாழ்.றோட்டறிக்கழகம், நல்லூர் றோட்டரக்ட் கழகம், யாழ்.பல்கலைக்கழக விவசாயத்தகவல் தொடர்பு நிலையம் ஆகியனவை இணைந்து நடத்திய பாதீனிய ஒழிப்பு சிரமதானத்தின்போது எடுக்கப்பட்ட படம். (ஐ)**



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் இரண்டாவது ஆண்டு நினைவுதினத்தையொட்டி நேற்று நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிநிகழ்வில் மாமனிதரின் உருவப்படத்துக்கு அவரது துணைவியார் கஜலக்ஷ்மி குமார் பொன்னம்பலம், புதல்வர் கஜேந்திரகுமார் ஆகியோர் மலரஞ்சலி செலுத்துவதையும் -
தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புப் பிரமுகர் சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஆகியோர் அஞ்சலியுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: பொ.இராஜேஸ்வரன்)

# வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு முதலில் தேர்தல் நடத்தவேண்டும்

## ஈ.பி.டி.பி. இப்படிக் கோருகின்றது

யாழ்ப்பாணம்,ஜன.6

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஈ.பி.டி.பி. கோரியுள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான திகதி குறிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் பங்குகொள்வதற்கும், வேட்பாளர்களை நிறுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இது மக்கள் மத்தியில் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஜனநாயக அரசியல் செயற்பாடுகள் குறித்து நம்பிக்கை உருவாகியுள்ளமையின் வெளிப்பாடாகும். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஜனநாயக அரசியலில் நம்பிக்கையும் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளமை மிகவும் வரவேற்புக்கு உரியதாகும். இந்த நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் பேணிக் காக்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்பாக வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஏனெனில் கடந்த 12 வருடங்களாக வடக்கு - கிழக்கு மாகாண சபை, அரசியல் தலைமைத்துவம் இல்லாமையினால் அதிகாரிகளின் ஆட்சியே நடைபெறுகின்றது.

இது இம்மாகாணத்தில் வாழும் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளை அப்பட்டமாக மீறும் ஒரு செயலாகும். மற்றும் இம்மாகாணத்தில் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும ஜனாதிபதித் தேர்தல் என்பன நடத்தப்பட முடியுமாக இருக்கிறது. எனவே மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு மட்டும் சூழ்நிலை சரியில்லை எனக் கூறுவது பொருத்தமற்றதாகும்.

ஆதலால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்பாக வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ-3)


## முக்கிய அறிவித்தல்

**சகல அங்கத்தவர்களுக்கும்**

ஒரு நாள் கோழிக்குஞ்சு பிறிமா புறொயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

**பொதுமுகாமையாளர்,**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**கோப்பாய்.**

(C/20107)


## 9ஆம் ஆண்டிலும் ஆறாது அலறுகிறோம்...!



### அமரர் கந்தையா பிறேமதாசன்

மலர்ந்தாய் 09★06★1974

உதிர்ந்தாய் 06★01★1993

*தாயகம் - "நன்னீஸ்" காங்கேசன்துறை.*

கலைவாணி வீதி, சித்தங்கேணி.

- குடும்பத்தினர்,
உரும்பிராய், பருத்தித்துறை, பிரான்ஸ், சுவிஸ்.

(96759)

## சாவகச்சேரிக்கு மினிபஸ் சேவை இன்று ஆரம்பம்

தென்மராட்சி,ஜன.6

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரையிலான மினிபஸ் சேவைகள இன்று தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன.

தினமும் இரு பஸ்கள் நாவற்குழி ஊடாக சேவையில் ஈடுபடுமென தென்மராட்சி மினிபஸ்கள் சங்கத் தலைவர் மெ.அற்புதராசா தெரிவித்தார்.

விரைவில் இப்பஸ்சேவைகள் கொடிகாமம் வரை நீடிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (3-117)

## பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களுக்கான கரப்பந்து, கபடி விளையாட்டுகளுக்கான பயிற்சி முகாம் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் இன்று பிற்பகல் 3மணிக்கு கிறீன் பீல்ட் வி.கழக மைதானத்திலும் -

கபடிப் பயிற்சி முகாம் நாளை பிற்பகல் 3மணிக்கு குருநகர் சென். றோக் வி.கழக மைதானத்திலும் - இடம்பெறவுள்ளன. (3-86)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜன.6

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான கபடிப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் நான்கு விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளன. (ஐ-86)

★ ★ ★

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான வலைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஞாயிறுக்கிழமை காலை8.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் நான்கு விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளன. (ஐ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.6

சுன்னாகம் புனித அந்தோனியார் இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று காலை 9.30 மணிமுதல் புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் செல்வன் யா.பிலிப் பிறேமதாஸன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் பிரதமவிருந்தினராக உடுவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் கலந்துகொள்வார். (ஐ-3)

## கண்காட்சி

நவாலி,ஜன.6

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட தையல், மனையியல் பயிற்சி பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் சணடிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ஐ-7-100)

★ ★ ★

வலி.மேற்கு, சங்கானை பிரதேச செயலகத்தினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட தையல், மனையியல் பயிற்சி பொருள்களுக்கான கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 19ஆம், 20 ஆம் திகதிகளில் சுழிபுரம விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-7-100)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.6

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று காலை 7 மணி முதல் வண்ணார்பண்ணை அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-6)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.6

சுன்னாகம் றோட்டரக்ட் கழக அங்கத்தவர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கழகத்தின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (-3)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் அன்பு நண்பி **தம்பிராஜா அனுஷியா** அவர்களின் அன்புத் தந்தையார் **தம்பிப்பிள்ளை தம்பிராஜா** அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் துயருறுகின்றோம். பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் அண்ணாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர் ஆத்மா சாந்தி அடைவதாக.

பழைய மாணவர்கள் ,1989 - 90 உயர்தர அணி
*யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி.*

(C/20109)

## இதய அஞ்சலி

எங்கள் இரசாயனவியல் பேராசான்

### ஆறுமுகம் மகாதேவன்

அவர்களின்

**மறைவையிட்டு இதய அஞ்சலி செலுத்தி அன்னாருக்கு எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.**

மருத்துவ பீட மாணவர்கள் (98 A/L)
*கொழும்பு, ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள்.*

(96761)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா பொன்னம்மா

பிரதான வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி நடராசா பொன்னம்மா நேற்று (05.01.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா (இளைப்பாறிய லிகிதர் - உணவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் செல்வமலர், மகேந்திரன் (Choproman நிறுவனம், மாப்பியன் லேன், மானிப்பாய் - முன்னாள் களஞ்சிய உத்தியோகத்தர், நெல் சந்தைப்படுத்தும் சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானகணேசன் (இளைப்பாறிய சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்), கமலாம்பாள் (ஆசிரியை, வட்டு.மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராமி (கொழும்பு), திருவரங்கன், துளசி (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற அன்னம், காலஞ்சென்ற செல்லம் மற்றும் விநாயகரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7ஆம் கட்டை,*
*சங்கானை.*

தகவல்:
(96763) ந.மகேந்திரன் (மகன்).

### ஐயாத்துரை கனகசபாபதி *(செல்வநாயகம்)*

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைச் சேர்ந்த ஐயாத்துரை கனகசபாபதி (செல்வநாயகம்) அவர்கள் நேற்று (05.01.2002) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் குமரேசு - அன்னபூரணம் தம்பதியினரின் மருமகனும் கமலதேவியின் பாசமிகு கணவரும், சசிகரன், தேனுஷா, சுபாங்கி, புவிராஜ், பிரவராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் மாணிக்கம், காசிப்பிள்ளை, பொன்மணி, கிருஷ்ணபிள்ளை தவமணி (சுவிஸ்), குணசேகரம், அருளம்பலம் (சுவிஸ்), குணபாலசிங்கம் (ஜேர்மனி), சிவமணி (சுவிஸ்) ஆகியோரின் பிரியமிகு சகோதரனும், கனகலிங்கம் (சுவிஸ்), தர்மலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
(96762) கா.வசந்தன் (பெறாமகன்)

## வலி.வடக்கில் 200 குடும்பங்கள் மீளக் குடியமரும்

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்தவர்களில் இருநூறு குடும்பங்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து பல்லாயிரம் குடும்பங்கள் 90ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்கின்றனர்.

இவர்களில் 200 குடும்பங்களை முதற்கட்டமாக மீள்குடியமர்த்தி அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொடுப்பனவு வழங்கல்

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட ஆரம்ப கணித செயற்றிட்டம் - முதல்நிலை 1,2 செயலமர்விலும், தரம் 4 செயலமர்விலும் கலந்துகொண்டவர்களுக்குரிய கொடுபனவுகள் நாளையும், நாளைமறுதினமும் பி.ப.2 மணி தொடக்கம் யாழ்வலயக் கல்வி அலுவலக நிதிக் கிளையில் வைத்துக் காசாக வழங்கப்படும் என யாழ்.வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் அறிவித்துள்ளார்.(ஐ-51)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.6

அமரர் ஆறுமுகம் மகாதேவனின் அஞ்சலிக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலாசாலையின் பழைய மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு கலாசாலை அதிபர் கேட்டுள்ளார்.

(ஐ-3)

## நேரடிப் பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம் தலைவர் பிரபாகரனுடன் அடிக்கடி இவ்வாறு கலந்தாலோசனை நடத்தவேண்டியிருக்கும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் -

தீவிர நோய்வாய்ப்பட்டு தற்போது மருத்துவக் கண்காணிப்பில் வசித்து வரும் அன்ரன் பாலசிங்கம் வன்னி போன்ற மருத்துவ வசதிகள் குறைந்த இடத்தில் நீண்ட காலம் தங்கியிருப்பது அவரது உடலுக்கும் உயிருக்கும் ஆபத்துத் தரவல்லது என்பதும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு -

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் கொழும்பு ஊடாக அன்ரன் பாலசிங்கம் வன்னி சென்று திரும்புவது பாதுகாப்பானதல்ல; அந்தப் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதிப்படுத்த முயன்றாலும் யாரேனும் ஒரு படை உறுப்பினர் அவரது உயிருக்கு ஆபத்து விளைவித்துவிடலாம் என்று புலிகள் தரப்பில் கருதப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் -

வன்னிக்குக் கிட்டவாக - தமிழ்நாடு சென்னையில் - ஏதேனும் பாதுகாப்பான ஓரிடத்தில் பாலசிங்கத்தைத் தங்க வைத்துக்கொண்டு பேச்சுக்களில் அவர் பங்குபற்றவும், தேவைப்படும் சமயத்தில் சென்னையில் இருந்து இலங்கை அரசின் ஹெலிகொப்டர் மூலம் வன்னிக்கு அவர் சென்று புலிகளின் தலைமைத்துவத்தைச் சந்தித்துத் திரும்பவும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்ற ஒரு சமரச யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

சென்னையில் பாலசிங்கம் தங்கியிருந்தால் அவருக்கு உரிய மருத்துவ வசதிகளையும் வழங்கமுடியும், பாதுகாப்பையும் தர முடியும் என்றும் கருதப்படுகின்றது.

"இலங்கையில் அமைதிப் பேச்சுக்களை இந்தியத் தரப்பின் முழு ஆசீர்வாதத்துடனும், உதவியுடனும் நடத்துவதிலேயே புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக இருக்கின்றார். இதன் காரணமாகவே தான் பிரதமராகத் தெரிவானதும் தமது இந்திய விஜயம் பற்றி அறிவித்து, உடனடியாக இந்தியாவுக்குச் சென்று அந்நாட்டுத் தலைவர்களுடன் அவர் விரிவாகப் பேச்சும் நடத்தி திரும்பியிருக்கின்றார்.

எனவே -

இந்திய அரசு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்திருந்தாலும் கூட இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் நேரடிப் பேச்சு நடைபெறமுன்னும், பேச்சுக் காலத்திலும் சென்னையில் அன்ரன் பாலசிங்கத்துக்கு பாதுகாப்பான இட வசதியைப் பெற்றுக்கொடுப்பது பிரதமர் ரணிலுக்கு அவ்வளவு சிரமமான காரியம் அல்ல" - என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)


### வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவிகள் சங்கத்தினால் நடத்தப்பட்ட

### செல்வி G.T.வடிவேலு ஞாபகார்த்த பரிசில் நிதியத்திற்கான

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| வழங்கியோர் | சீட்டிலக்கம் | பெறுபவர் |
|---|---|---|
| *முதலாம் பரிசு* : லுமாலா சைக்கிள் | | |
| E.S.பேரம்பலம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 11056 | காசிலிங்கம், பொற்பதி வீதி, கொக்குவில். |
| *இரண்டாம் பரிசு*: மின்விசிறி | | |
| திரு. R.வசந்தகுமார் 625, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 6895 | பிரியகாந்தி.அ அரசடி வீதி, தோப்பு, அச்சுவேலி. |
| *மூன்றாம் பரிசு* : றேடியோ | | |
| இளவரசி புடைவையகம் நவீன சந்தை, யாழ்ப்பாணம். | 13477 | மகேசலிங்கம்.பி. 154/8 'B' ஆத்தியடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| *ஆறுதல் பரிசுகள்* : சுவர் மணிக்கூடு | | |
| 1. திரு.ந.வில்வநாதன் பிரப்பங்குளம் லேன், யாழ்ப்பாணம். | 5609 | தங்கசிவம் இன்பராஜ் 147, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| 2. Jaffna Technical Institute 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம். | 4584 | தவேந்திரன்.எம். மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். |
| 3. கீர்த்திகா கொமினிகேஷன் 59, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | 10821 | ம.சிவகுமார் 17 A, சிவன் புது வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| 4. தயா அச்சகம் ஓ(f)வ் செற் பிறின்ரேஸ், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 14475 | குஷி.எஸ். 193, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| 5. சிறி ராஜன் பன்சி ஹவுஸ் 65, 66, நவீன சந்தை, யாழ்ப்பாணம். | 6721 | இ.ஜெசிந்தா கொக்குவில் மேற்கு, கொக்குவில். |
| 6. திரு. S.மகேஸ்வரன் Jaffna Electricals ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 11108 | ச.மருதாசலன் மே/பா. அ.சண்முகநாதன், துர்க்காபுரம், தெல்லிப்பழை. |
| 7. திரு. S.மகேஸ்வரன் Jaffna Electricals ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 13622 | திருமதி பா.ஞானரூபி பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. |
| 8. திரு. S.பரமராஜா மூன்றாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். | 5992 | அனுசா அச்சுவேலி வடக்கு, நீர்வேலி. |
| 9. திரு. M.கிருபாலன் கிருபா நகை மாளிகை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 12236 | இ.நிதீபன் வன்னியசிங்கம் வீதி, இருபாலை வீதி, கோண்டாவில். |
| 10. சிற்றி ஹாட்வெயர்ஸ் அன்ட் ஸ்ரோர்ஸ் 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 11465 | க.இரட்ணலிங்கம் இராமலிங்கம் வீதி, முடமாவடி. |

பரிசுப் பொருள்களை 10.01.2002இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

தலைவர், ப.மா.சங்கம்.

(C/20111)

*விளம்பர அன்பளிப்பு:*

**ALDI ELECTRONICS**

*No.15, Stanley Road, Jaffna.*



### தவறிவிட்டன

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் சந்திக்கும் மானிப்பாய் சந்தைக்கும் இடையில் மண்ணிறப்பை ஒன்றினுள் 1,55,600.00 ரூபா பணமும் 2 பவுண் மோதிரமும் தவறவிடப்பட்டுவிட்டன. அதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சங்கரப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள மூர்த்தி வீடியோ அல்லது மானிப்பாய் ஆலடிச் சந்தியில் அமைந்துள்ள அங்கவன் வீடியோ அன் ஸ்ருடியோ மூவிஸ் அல்லது T.P.2884 உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (96766)

### ராஜா யாழ்ப்பாணம்

08.01.2002 வரை

ஷியாம், சிம்ரன், ஜோதிகா நடித்த

**12 B**

தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 6.00

09-01-2002 முதல்

வீரலுக்கேத்த வீக்கம்

(C/20092)

### நிறஞ்சனாஸ் சங்கானை

கமல் (இரட்டை வேடம்), மனீஷா, ரவீனா மற்றும் பலர் நடித்த

**ஆளவந்தான்**

(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

(C/20095)

### லஷ்சுமி இணுவில்

13ஆம் திகதி வரை

அஜித், மம்முட்டி, தபு, ஐஸ்வர்யா

**கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்**

(ரீல்ஸ்)

தினசரி: 10.30, 2.30 (பு.நே.)

(96767)

### நாகம்ஸ் சுன்னாகம்

8ஆம் திகதி வரை

அஜித், பார்த்திபன், தேவயானி நடித்த

**நீ வருவாய் என**

(ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00

(96764)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 23 - 09 - 1931

ஆண்டவன் அடியில் 30 - 12 - 1999

### அமரர் இளையதம்பி நாகேந்திரம்

*(ஓய்வுபெற்ற திறைசேரி உத்தியோகத்தர், முன்னாள் ஸ்தாபன முகாமையாளர் ~ பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், உரிமையாளர் ~ கலாஜோதி புத்தக நிலையம், சங்கானை)*

**திதி: அட்டமி 06.01.2002**

ஆண்டுகள் இரண்டு சென்றன - அப்பா
ஆறவில்லை எம் துயரம்
ஆறுதல் கூற யார் இருந்தென்ன?
ஆசை வார்த்தை கூற எம்மருகில் நீங்களில்லை.
காலமெல்லாம் வாடுகின்றோம் உம் நினைவால்
கடுதினில் வந்திடுவீர் எம்மருகில்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய நாங்கள் எல்லோரும் இந்நாளில் ஆண்டவனை மன்றாடுகின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இலகடி, சங்கானை.
'கலாஜோதி' புத்தக நிலையம்,
சங்கானை.

(96771)

*அன்பு மனைவி, மக்கள் மருமக்கள்,பேரப்பிள்ளை.*

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் மகாதேவன்

(B.Sc., Dip. in Edu., S.L.E.A.S.)

வேதியியல் வேந்தனென்றே
போதனையால் எமையாண்ட
பெருந்தேவன் நீரன்றோ!
பெருமானடி சேர்ந்தாலும்
ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டிநிற்கும்

19ஆம் அணியினர்,
யாழ்.மருத்துவபீடம்.

(C/20113)



## மரண அறிவித்தல்கள்

### சவிரியாம்பிள்ளை அன்ரனி

**(கிட்டப்பா சின்னக்கிளி)**

குருநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சவிரியாம்பிள்ளை அன்ரனி (கிட்டப்பா சின்னக்கிளி) நேற்று (05.01.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சவிரியாம்பிள்ளை மற்றும் ராசாத்தி ஆகியோரின் அருமை மகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற றொன்சியா மற்றும் ஆன்சைனுஜா (H.F.C., Year-3) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான மனவற்பிள்ளை - தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் யேசுதாசன் - லூர்த்தம்மா ஆகியோரின் பெறாமருமகனும் எட்வேட் (ஹொலண்ட்), மனவற்பிள்ளை (நோர்வே), ராஜேஸ்வரி, காலஞ்சென்ற புறொக்கில்டா, றாஜா (இத்தாலி), ஈச்மன் (இத்தாலி), வினிபிறட் (இத்தாலி), கொன்சன்ரைன் (இத்தாலி), வலன்ரைன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மோசஸ், நோபட், ஜெனதாஸ் (இத்தாலி), ஜெயம் (ஹொலண்ட்), ஜொய்சி (நோர்வே), கீதா (இத்தாலி), காலஞ்சென்ற விமலா மற்றும் வலன்ரினா, சிந்தியா (இத்தாலி), அமுதா, பிறேமா, ராசக்கோன், ரவி, நகு (ஜேர்மனி), சதீஸ் (ஜேர்மனி), மதன் (லண்டன்), புனிது, மாலா, கீதா (ஜேர்மனி), சிக்குறின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை புதிய நேரம் 3.30 மணிக்கு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A.மோசஸ்
(மைத்துனர்)

*13, மத்திய மேற்கு வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

(96768)

### திருமதி முத்துக்குமாரு நாகேஸ்வரி

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துக்குமாரு நாகேஸ்வரி நேற்று (05.01.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற புவனேந்திரம், மகேஸ்வரி (கொழும்பு), கமலேஸ்வரி, திலகவதி (ஜேர்மனி), நவராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யசோதராதேவி (வவுனியா), ஸ்ரீஸ்கந்தகுமார் (சவூதி), ஸ்ரீரமணகுமார் (ஓமான்), ஸ்ரீசெல்வகுமார் (அங்கர் கொம்பனி, கொழும்பு), ஸ்ரீசிவகுமார் (ஜேர்மனி), ஸ்ரீகிருஷ்ணகுமார், ஸ்ரீரஞ்சனாதேவி (ஜேர்மனி), ஸ்ரீலக்சுமிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசமூர்த்தி (ஆசிரியர்), கௌரி, யசோதரா, தேவிகா, செல்வி, யோகராணி, சிவனேசன், ரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும், வினோத்ராஜ், சுதாகரன், சாருஜன், மாதுமை, பிரணவன், ஜாழினி, பிரதாப், சாஜனகன், சர்மினி, லக்ஷியா, பிரகாஷ், பவித்ரா, விபிலன், மிதுலன், மாருஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.ஸ்ரீகிருஷ்ணகுமார்
(கண்ணன் - மகன்)

*சூராவத்தை,*
*சுன்னாகம்.*

(96770)

# சுயாட்சித் தீர்வையே தமிழர்கள் ஏற்பார்கள்!

## நாடு திரும்பிய சிவா கருத்து

கொழும்பு,ஜன.6

"ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் வழங்கப்படும் தீர்வை ஒருபோதும் ஏற்கமாட்டோம். வடக்கு - கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியைத் தரக்கூடிய தீர்வையே தமிழ்மக்கள் ஏற்பார்கள்" - என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இருந்து நேற்று கொழும்பு திரும்பிய கையோடு தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழர் விடுலைக் கூட்டணி அலுவலகத்தில் நடந்த இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் அரசு உடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும். நாட்டின் வரலாற்றில் அமைதித் தீர்வு காண்பதற்கு இதுதான் கடைசித் சந்தர்ப்பம். அரசு சரியான முறையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் பெரும் அழிவை எதிர்நோக்க வேண்டிவரும்.

தமிழ் தேசிய போராட்டம் இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. விடுதலைப் புலிகள்தான் இந்த நிலைக்குக் காரணமானவர்கள்.

இப்போது உருவாக்கப்பட்டுள்ள கூட்டமைப்பு தொடர்ந்து செயற்படும். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு தவறினால் கூட்டமைப்பு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அவை அரசுக்கு அச்சுறுத்தலாக அமையும் - என்றார் அவர்.

(உ-3)


# பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் - இணுவில்.

**2004 A/L கலை - வர்த்தகம்**

ஆரம்பம்:- 12.01.2002 சனி

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| இந்து சமயம் | தரன் | தரன் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| நாடக - அரங்கு | சுகந்தன் | சுதன் |
| ஆங்கிலம் | R.இராஜேஸ்வரன் | R.இராஜேஸ்வரன் |

*யாழ்ப்பாணம் - 9.00 A.M.*
*இணுவில் - 3.00 P.M.*

(96765)



# புலமைப் பரிசில் திட்டம் 2002 போட்டிப் பரீட்சை (06-01-2002)

**போட்டிப் பரீட்சைக்கூடாக புலமைப்பரிசில் திட்டம் 2002 விண்ணப்பித்த மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை (பொது அறிவு, நுண்ணறிவு) இன்று 06-01-2002 ஞாயிற்றுக்கிழமை (பகல் 10 மணி முதல் 11 மணி வரை) இடம்பெறும்.**

**அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.**

**அனுமதி அட்டைகள் கிடைக்கத் தவறிய மாணவர்கள் உங்களுக்காக எமது தலைமை அலுவலகத்தில் அல்லது எமது நெல்லியடிக் கிளை நிறுவனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட மண்டபத்தில் தோற்றமுடியும்.**

(C/20106) இயக்குநர், **IIS**, யாழ்ப்பாணம்.



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி - யாழ்.

**A/L 2004**

கலை, வர்த்தக புதிய வகுப்புகள்

ஆரம்பம்:-12.01.2002 8 மணி

ACC. - திரு. பாலவாசன்
ECO. - திரு. விக்கி
COMM. - திரு.நந்தீஸ்
LOG. - திரு. சயந்தன்
ENG. - திரு.விஸ்வநாதன்

TAM. - திரு.குழந்தை, திரு.லிங்கம்
H/C. - திரு.பத்மராஜா
GEO. - திரு. பாபு
HIST. - திரு.சுதன்
DRAMA - திரு.மதி
CHRIST. - திரு. வசந்தன்

இன்று ஞாயிறு முதல் (6.1.02)

(96714) அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.



# IIS இன் விசேட அறிமுகம

**TECHNICIAN DIPLOMA in Radio, TV, Computer and Electronic Equipment Servicing**

**Fully Practical Oriented**

SYLLABUS INCLUDES

- Electronic Component Study
- Proffessional Circuit Study
- Related Trouble Shooting Study
- Computer Hardware Repairs (Monitor, UPS, Printer etc..)

ஆரம்பம் 12. 01. 2002 காலை 10மணி

மேலதிக விபரங்களுக்கு

Director ,IIS.



O/L எடுத்தவர்களுக்கான

# ENGLISH

புதிய பிரிவு (2004)

ஆரம்பம் - 10.01.2002 காலை - 8.30 மணி

**OXFORD ENGLISH ACADEMY**

P.K.Lane, Pointpedro.

**By:MR. B.JOTHY**

பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்களுக்கான வகுப்புகள்

ஆரம்பம். 10. 01. 2002 - பி.ப.4மணி

(96726)



# சுனில் ஆட்ஸ்

☆ A.R.Rahman இன் அனைத்து ஹிந்திப் பாடல்களையும் CDல் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

☆ English, Tamil, Sinhala பாடல்களையும் Audio CD, M.P. 3இல் பதிவு செய்துதரப்படும்.

☆ தரமான Audio CDல் பாடல்கள் பதிவுசெய்திட 250/= மட்டுமே

**சுனில் ஆட்ஸ்**

305, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம். (C/20112)



# A/L 2004

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஜனவரி-12

சனி - 8மணி

**DMI**

(C/19073) யாழ்நகர்







### நோர்வேக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகளை இக்குழுவினர் கொழும்பில் மேற்கொள்வர்.

கொழும்பில் இரு தினங்கள் இக் குழுவினர் தங்கி நிற்பர்.

குழுவினர் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட முக்கிய அரசுப் பிரமுகர்களைச் சந்தித்து பேச்சு நடத்துவர்.

இதற்கிடையில் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஆகியோர் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதர் வெஸ்ட்போர்க்கைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

(உ-3)

### அரசின் முதல் சட்டமூலம்

உள்ளூராட்சி மன்ற விசேட திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வருகிறது. இது அவசர சட்டமூலமாக கொண்டு வரப்படுகிறது. இத்திருத்தச் சட்டமூலத்தின்படி தேர்தல்கள் அறிவிப்புக்கும் நியமனப்பத்திரங்கள் தாக்கலுக்கும் இடையிலான காலம் குறைக்கப்படும்.

### கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிடுவதா என்பது குறித்து ஆராய்ந்து முடிவுசெய்வதற்காக கூட்டமைப்பின் தலைவர்கள் நாளை கொழும்பில் கூடுகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகிய கட்சிகளின் தலைவர்களே நாளை கொழும்பில் கூடி ஆராயவிருக்கின்றனர்.

(உ)

### ஒருபுறம் - சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக பொலீஸ் கொமாண்டோப் படையணியில் இளைஞர்களைச் சேரும்படி அழைக்கும் வர்ண சுவரொட்டிகள் கொழும்பிலும் பிறமாகாணங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் விசேட படைப் பிரிவுக்கு ஆள்களைச் சேர்க்கும் நேர்முகத் தேர்வுகள் நாட்டின் பல்வேறு இடங்களிலும் உள்ள 25 இராணுவ முகாம்களில் நடைபெற்று வருகின்றன. அவை ஜனவரி 18ஆம் திகதி வரை இடம்பெறும்.

நிரந்தர காலாட் படைக்கான தேர்வுகள் ஜனவரி 30ஆம் திகதி வரை நீடிக்கும்.

"நிரந்தர காலாட் படையில் சுமார் பத்தாயிரம் வெற்றிடங்கள் உள்ளன. புதிதாகச் சேர்க்கப்படுவோர் ஸ்ரீலங்கா இலகு காலாட் படை, கெமுனு வோச், சிங்க றெஜிமெண்ட், கஜபா றெஜிமெண்ட், விஜபா இலகு காலாட் படை மற்றும் கொமண்டோக்கள், விசேட படைகள், வான்வழி தரையிறங்கு பிரிகேட் ஆகியவற்றை உள்ளடக்கிய - அமெரிக்கத் தரப்பின் சிறப்புப் பயிற்சி பெற்ற 53ஆவது டிவிஷன் ஆகியவற்றுடன் இணைத்துக்கொள்ளப்படும்" - என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

விமானப் படையும் பொதுக் கடமைகள், பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப சமிக்ஞை, வான் போக்குவரத்துக் கட்டுப்பாடு, இயந்திரங்கள், நிர்வாகம் மற்றும் நிர்வாகப் படைப் பிரிவு ஆகிய ஏழு பிரிவுகளுக்கு 750 பேரை புதிதாகச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றது.


புத்தாண்டை நோக்கி ...... D
புதிய பரிமாணத்தில் ...... C
புதிய பிரிவுகள் ...... S

முன்னிலும் அங்கீகரிக்கப்பட்ட
**Professional Computer Courses**

- *JUNIOR DIPLOMA IN COMPUTER SCIENCE*
  - Modules *(Duration 3 Months)*
  - MS Word, MS Excel, Power point with Internet & E-Mail
- *DIPLOMA IN COMPUTER PROGRAMMING (8 Months)*
  - Introduction to Programming Principle
  - Programming Techniques Using C++
  - Object Oriented Programming Using Java
- *DIPLOMA IN HARDWARE TECHNOLOGY (6 Months)*
  - Introduction
  - Trouble Shooting
  - PC Assembling & Software Installation

The above courses which commences on Saturday 12th January 2002, will begin at 2.00 pm (SL Time)

# DCS

**COLLEGE OF COMPUTER TECHNOLOGY**

124/2, Thirunelvely, Jaffna.
E-mail : dcs@slt.lk (C/20103)


# மரண அறிவித்தல்

## திருமதி தயாநிதி சந்திரகுமார்

தாவடி தெற்கு, கொக்குவில், வேம்படி முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த திருமதி தயாநிதி சந்திரகுமார் 02-01-2002 புதன்கிழமையன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் துரைசிங்கம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், இராசரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சந்திரகுமார் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மனைவியும், கீர்த்தனா, துவாரகா, தாரணா ஆகியோரின் அருமைத் தாயாரும் கமலராஜன் அவர்களின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07-01-2002) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

*வேம்படி முருகமூர்த்தி வீதி, தாவடி தெற்கு, கொக்குவில். (96727)*

துரைசிங்கம் கமலராஜன் *(சகோதரன்)*

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.